ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

மார்ச் - ஏப்ரல் 2026


ஆண்டு 6 ▲ இதழ் 5

விலை 250/-

ரமழான் மற்றும் மகளிர் தின சிறப்பிதழ்



## தைராய்டு
சுரப்பி பிரச்சினைகளும்
## நிவாரணமும்



## ஆளுமை அறிமுகம்



# வாசுகி வாசு

# முத்தமிழ் கலசம்

ஆண்டு 6 ▲ இதழ் 5

மார்ச் - ஏப்ரல் 2026

இருமாதத்திற்கொருமுறை

பிரதம ஆசிரியர் : சித்தி வஃபீரா

Chief Editor & publisher : Sithy Wafeera

சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்

Hon. Editor : Tamilnenjam Amine

ஆசிரியர் குழு:

Dr. ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ,
ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன்,
மின்னத் ஸரா பரூஸ்

வடிவமைப்பு:

Omardeen Aysha Shakeela

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
email :

muththamizh.kalasam@gmail.com

The Editor of "Muththamizh kalasam",
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka


# மீண்டெழு


P.M. நுஸ்ரத் அமானா
சாய்ந்தமருது


இழப்பதற்கு உன்னிடம்
என்ன இருக்கிறது
என்கிறார்களா?
'என் உயிர் இருக்கிறது' என
நிமிர்வாகச் சொல்!

தோல்வியாக இருக்கட்டும்
நம்பிக்கைத் துரோகமாக
இருக்கட்டும்.
ஒரு முறை வீழ்ந்தெழுந்து பார்!

ஏன் அது பலமுறையாக
இருக்கட்டுமே!
உச்சியிலிருந்து வீழ்ந்த
மழைத்துளிகள்

வெள்ளமாய்
பெருக்கெடுப்பதைப் போல்
அத்தனை தடைகளையும்
உடைக்கும்
வீரியம் பெறுவாய்

வெற்றியை விட
தோல்விகள் கற்றுத்தருபவை தான்
அதிகம்
அதுவே பின்னொருநாளில்
உன் சரித்திரம் சொல்லும்
அத்தியாயங்களாய் மாறும்

எழுதுகோலின் கூர்முனை கொண்டு

நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

# ஆசிரியர் பக்கம்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்! (அஸ்ஸலாமு அலைக்கும்)

மாண்புகளை உணர்த்தும் நோன்புக்குரிய ரமழான் மாதத்தில் பயணிக்கிறோம். எப்படி இப்புனித மாதத்தில் கண்ணியத்தைக் கடைப்பிடித்து, ஈகையெனும் பெருங்கொடையையும், ஏனைய நன்மைகளையும் செய்கிறோமோ, அது போலவே, ஏனைய மாதங்களிலும், தேவையானோருக்கு நம்மால் இயலுமானதை தர்மம் செய்து, ஏனைய நற்பணிகளையும் தொடர்வோமாக!

சர்வதேச மகளிர் தினம் மலரவிருக்கும் இம்மாதத்தில், எம் இதழின் பெரும்பாலான படைப்பாளர்கள் பெண்களென்பதே எம் இதழுக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. இப்போது பெரும்பான்மையான பெண்கள் எல்லாத் துறைகளிலும் வியாபித்து, சாதனைகளின் உச்சம் தொட்டுக் கொண்டிருப்பதும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. அதேநேரம், உலகின் சில இடங்களில், பெண்கள் ஒடுக்கப்பட்டு, வரையறுக்கப்பட்ட எல்லையிலேயே அடிமையாக வாழ்ந்து கொண்டிருப்பதும் கண்கூடு. அண்மையில் முழு உலகையும் உலுக்கிப் போட்டுக் கொண்டிருக்கும் Epstein files மூலம் வெளியான மர்மங்களும் தகவல்களும் சொல்வது, பல தசாப்தங்களாக ஜெஃப்ரி எப்ஸ்டீன் எனும் தனியொரு ஆணாதிக்கவாதியால், பெண்களும் சிறுமிகளும் தனியொரு தீவில் சிறைப்படுத்தப்பட்டு, உலகின் பல்லாயிரக் கணக்கான செல்வந்தர்களுக்கும்,பிரபலங்களுக்கும் விருந்தாக படைக்கப்பட்டு சொல்லொணாக் கொடுமைகளை அனுபவித்து வந்த துன்பியல் வரலாறுகளைத் தான். இந்த நவீன யுகத்திலும் கூட, இதுபோன்ற மனித மிருகங்கள் பின்னோக்கிப் பயணித்து கற்கால வாழ்க்கைக்குத் திரும்பியிருக்கின்றன என்பது மனதுக்கு வேதனை தரும் நிகழ்வாக அமைந்துள்ளது.

உங்கள் ஆதரவுடன் மிகக் கவனமாக நம் இதழ் வளர்ச்சியடைந்து வருவதை, வந்து சேரும் ஆக்கங்களும், பிரதிகளைக் கோரும் புதிய வாசகர்களின் வருகையும் சான்று பகர்கின்றன. பல புதியவர்களின் வரவு மகிழ்ச்சிக்குரியதாக அமைந்திருக்கிறது. மேலும் என்ன மாதிரியான அம்சங்களை இதழில் சேர்க்கலாம், மாற்றங்களைக் கொண்டு வரலாம் என உங்கள் ஆலோசனைகளை எமக்குத் தெரிவியுங்கள்! அதேபோன்று குறைகள் ஏதுமிருப்பின், தயங்காமல் எமக்கு சுட்டிக்காட்டுங்கள்! அவற்றை நிவர்த்தி செய்ய முயற்சிகளை மேற்கொள்கிறோம். நிறைவாக இருப்பின், உங்கள் நண்பர்களுக்கும் எம் இதழை அறிமுகப் படுத்துங்கள்! உங்கள் ஆதரவு எம்மை மேலும் உறுதியாக அடியெடுத்து வைக்க உந்துகோலாக அமையும்.

எம் இதழின் ஆளுமை அறிமுகங்கள் பிரபலங்கள் மட்டும் தானென்பதைத் தாண்டி, பன்முகத் திறமைகளுடன் குடத்துள் விளக்காக ஒளிர்பவர்களையும், குன்றின் மேல் விளக்காக ஒளிர வைத்து, அவர்களின் ஆற்றல்களின் மீதும் சமூகத்தின் பார்வையைத் திருப்பவும் நாம் முயற்சிகளைத் தொடரவுள்ளோம்.

*மேலும் ஆளுமை அறிமுகத்தை, சிறப்பான நேர்காணலாகக் கொண்டு வருவதற்காகவும் முனைந்து வருகிறோம். இதழ் பற்றிய உங்கள் கருத்துக்களையும், தெரிவித்து எம் இலக்கியப் பயணத்திற்கு வலு சேர்க்க வாருங்கள்! இணைந்தே பயணிப்போம்.*

*ஈதுல் பித்ர் வாழ்த்துகளுடன்,*

*கொண்டாடும் வாசகர்களுக்கு முன்கூட்டிய சித்திரைப் பிறப்பு வாழ்த்துகளும் உரித்தாகட்டும்!*

*நன்றி!* *என்றும் அன்பான*

*எஸ். வஃ.பீரா*

(பிரதம ஆசிரியர்)

# ஹைக்கூ கவிதைகள்

கருவறையை
கல்லறையாய் மாற்றுகிறது
மலடிப் பட்டம்

விரும்பாவிட்டாலும்
வந்து செல்கிறது
கெட்ட கனவு

பட்டத்திற்கு
பறக்கக் கற்றுத் தருகிறது
காற்று

அத்தனை உணர்வுகளையும்
மறைத்துக் கொள்கிறது
புத்தகம்

காயப்படுத்தியவர்களை
கண்ணீர் விடச் செய்கிறது
வெங்காயம்

புல்லாங்குழலுக்கு
இசைக்கக் கற்றுத் தருகிறது
காற்று

அடை மழை
வாடிப் போகிறது
ஏழையின் முகம்

நேசிக்கும் போது மட்டுமே
பேசிக் கொள்கிறது
புத்தகம்

**முபீதா அமீன்**
அக்கரைப்பற்று

# பெண்ணே! பெண்ணே!



மகளிர் என்றாலே
புகழின் சிகரம் தொடும்
புண்ணிய படைப்பு
மானிட ஜாதியில்
மதிப்பிட்டு அடங்காது
மங்கையரின் உழைப்பு

பெரும் பெரும் சாதனையாளர்களை
பெற்றவள் என்ற வகையில்
பெருமை அடைகிறாள் பெண்
கருவைக் கட்டிக் காக்க
கற்றவள் என்ற வகையில்
கனதியடைகிறாள் காரிகை
வீட்டுக்குள்  இருந்து வேகும்
வேதனையான யுகம்
விண்ணேறிப் போய்விட்டது
அவள் வீதிக்கு வந்து
சாதிக்கும் யுகம் இப்போ
சபையேறி வந்திருக்கிறது
உணவு சமைப்பதற்கும்
உடைகள் துவைப்பதற்கும்
உண்டானவள் கிடையாது பெண்
பிள்ளைப் பெறுவதற்கும்
பிழைகளைச் சகிப்பதற்கும்
என்றானவளல்ல பெண்

அவள் உறவுக்கும் உலகுக்கும்
உயிரான கண்
உன்னையும் என்னையும்
பெற்ற முதன்மை எண்
ஆணால் செய்யக் கூடியவற்றை
தானாய் செய்து கொண்டு
தாயாயும் பாத்திரம் ஏற்று
தாரணியை ஆள்பவள்தான் பெண்

வீணானவள் என்று பெண்ணை
வீட்டுக்குள் முடக்க முடியாது
கனிவானவள் என்றவளை
காட்சிப் படுத்தலில் சரியேது
பெருமைப் படுமளவு
பெறுமானம் மிக்கவள்
வாழ்க்கைத் துணைக்கு
வருமானம் மிக்கவள்
அறைகள் ஒவ்வொன்றுள்ளும்
அடங்கிக் கிடந்தாள் அன்று
துறைகள் ஒவ்வொன்றிலும்
துலங்கிக் கொண்டிருக்கிறாள் இன்று

செவ்வாய் அழகி என்று
சித்திரிக்கப்பட்டவள்தான் அன்று
செவ்வாய்க்குப் போய்
வருகிறாள் இன்று

சித்திரப் பதுமை என்று
சிலாகிக்கப்பட்டவள் தான்
அன்று
சரித்திரம் படைத்துக்
கொண்டிருக்கிறாள் இன்று

அகல முடியாமல்
அடங்கிக் கிடந்தவள் அன்று
சகல துறைகளிலும்
சாதனை படைக்கிறாள் இன்று

அடுப்படிக்கு மட்டும்தான்
லாயக்கு என்றார்கள் அன்று
உருப்படியான சேவைகள்
செய்து கொண்டிருக்கிறாள் இன்று
அன்பு கருணை தியாகம்
அனைத்துக்கும்
அடிப்படை பெண்
அவளில்லா உலகம்
ஆரோக்கியம் இழந்த மண்

**றம்ஸானா ஸமீல்**

# நோன்பின் சிறப்பு

பசியை பொறுத்து
உள்ளத்தை தூய்மையாக்கும்
பரிசுத்த மாதம் – ரமழான்

உணவை தவிர்த்து உடலைத்
தூய்மையாக்கும் இனிய மாதம் –
ரமழான்.

உயர்ந்த பயிற்சி அளித்து மனித
நேயத்தை எமக்கு தரும்
மாதம் –ரமழான்.

நாக்கை அடக்கி நன்மை பேச
கற்றுத் தரும்
ஆசானிய மாதம் – ரமழான்

கண்களைக் காத்து
கட்டுப்பாடு தரும்
காவலாளியாக வரும்
மாதம் – ரமழான்

பசியின் வேதனை உணரச் செய்து
பாவியின் மனமும் நெகிழச்
செய்யும் மாதம் – ரமழான்
சஹர் நேரத்தின் அமைதியில்
அல்லாஹ்வை நினைக்க
ஆனந்தம் கொடுக்கும்
அமைதியின வரமான
மாதம் – ரமழான்.

இஃப்தார் நேரத்தின் முதல் துளியில்
இதயம மலரும் இனிய நிமிடம்
துளிர்த்திடும் – மாதம் ரமழான்.

துஆ உயர்ந்து வானம் தொட
தவறுகள் எல்லாம்
மன்னிப்பு பெறும்
மகிமையின் மாதம் – ரமழான்.

நெஞ்சின் சுத்தமும் நம்பிக்கையும்
வாழ்க்கை வழியாக
ரஹ்மத் பொழியும்
அல்லாஹ்வின் வரம் சுமந்து
ஜனனித்த மாதம் – ரமழான்.

**றஹீமா இன்ஸார்**
மீராவோடை

# இனியொரு விதி செய்வோம்....

இனி ஒரு விதி செய்வோம்
இகத்தினிலே வாழ வழி அமைப்போம்
தனி ஒரு மனிதன் நினைத்தால்
தரணியைத் தாங்கும் வன்மையைப் பாடுவோம்

மாதர் என்றே மாட்சிமை கொள்வோம்
மனங்கள் சிலிர்க்க பூமழை தூவுவோம்
தீதுகள் அறிந்தே தூர விலகுவோம்
தீட்சண்ய பார்வையால் திண்மை கொள்வோம்

அறம் சிறக்கவே அன்பைப் பொழிவோம்
அன்னை போலவே அரணாய் எழுவோம்
கரங்கள் கோர்த்தே கயமை ஒழிப்போம்
கரும்பாய் இனித்து கசப்பினை வெல்வோம்

கரம் ஏந்தும் வறுமையைத் தகர்ப்போம்
வரம் கொடுக்கும் வனிதையாய் மாறுவோம்
பிறர் மனங்களிலே நின்று நிலைக்கும்
பிறப்பினை உயர்த்தும் பணியினால் திளைப்போம்

ஏற்றங்கள் காண ஏணியாய் இருப்போம்
ஏளனப் பார்வையை வெறுந்தூசாய் நினைப்போம்
சீற்றங் கொள்ளாது சீர்மை யடைவோம்
சிந்தையைத் திருத்தி செகத்தினை ஆளுவோம்

மானத்தைக் காக்கும் மாண்புகள் கற்போம்
மாதவம் செய்தே மானிடர் காப்போம்
மாச்சரியம் பூண்ட மடமையை வீழ்த்துவோம்
மாசற்ற தேசத்தை மண்ணில் படைப்போம்

**நுஸ்ரா லியாகத் அலி** - (என்.நூர்)
தர்கா நகர்





# தும்பை செய்கை


**மு.ஹ.முர்ஷிதா ஷிரீன்**
விவசாய போதனாசிரியர் ( ஏறாவூர் )
சம்மாந்துறை, இலங்கை.


குக்குர்பிடேசி குடும்பத்தினை சேர்ந்த மோமோடிகா இனத்தில் உள்ளடங்கும் தும்பையானது, இந்தியாவின் மலாய் பிரதேசத்தினை பிறப்பிடமாக கொண்ட போசணை நிறைந்த மருத்துவ குணமுடைய பல்லாண்டு தாவரமாகும்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளத்தில் (இமய மலை) மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் பயிர்ச்செய்கை செய்யப்படுகின்றது.மேலும் இது வெவ்வேறு சமூகத்தினரிடையே வெவ்வேறு பெயர்களால் அழைக்கப் படுகின்றது.

1. ஆங்கிலம் - Small Bitter gourd, Spine gourd
2. பெங்காலி - கார்டோலி
3. இந்தி - ககோரா, பரோரா
4. சிங்களம் - தும்ப கரவில

**100 கிராம் தும்பை காயில் காணப்படும் போசணை அளவு:**

- நீர் - **83.2** g
- கார்போஹைட்ரேட்டுகள் - **10.6** g
- புரதம் - 2.1g
- கொழுப்பு - 1.0g
- கல்சியம் - 23 mg
- பொஸ்பரஸ் - 38mg
- இரும்பு - 2 mg

**விட்டமின்கள்**

- கரோட்டின் - 126 mg
- தியாமின் - 70 mg
- ரிபோப்ளேவின் - 60 mg
- நியாசின் - 0.4 mg
- வைட்டமின் C - 96 mg
- சக்தி - **60** கலோரி

**மருத்துவ குணங்கள் :**
**காய்கள்:**

இது சிறுநீர் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைவதுடன், இரைப்பை, வயிற்றோட்டம், ஈரல் பாதுகாப்பு மற்றும் வைரஸ் எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளது.



- ஆஸ்துமா, தொழுநோய் போன்ற நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல் இதற்கு உண்டு.
- அட்டை, பாம்பு கடி, யானைக் கால் காய்ச்சல், மனநல கோளாறுகள் மற்றும் இதய பிரச்சினைகள் தோன்றுவதை தடுக்கிறது.
- நீரிழிவினை கட்டுப்படுத்த பயன் படுத்தப்படுகிறது.
- முகப்பருவை குணப்படுத்த பயன் படுகிறது.

**விதை**

- தோலழற்சி, தோல் தொடர்பான பிற பிரச்சினைகளுக்கும் சிறந்த தீர்வினை தருகிறது.

**இலை**

- கருத்தரித்தலை தூண்டும் இயல்புடையது.
- சளி, வாதம், பித்தம் போன்றவற்றை சமநிலைப்படுத்தும்.
- மஞ்சள் காமாலை, ஆஸ்துமா, மூலநோய், கல்லீரல் கோளாறுகள் மற்றும் சிறுநீர் பிரச்சினைகளை நீக்குகிறது.
- தோல்நோய்களுக்கும்பயன்படுகிறது.

**வேர்**

- தூண்டும் கிருமிநாசினி.
- கட்டு மற்றும் பாம்பு கடிக்கு பயன்படுத்தப்படுகிறது.

**சிறப்பு இயல்பு :**

- ஓரில்ல பல்லாண்டு கொடியாகும்.
- வெற்றிகரமான மகரந்தச் சேர்க்கைக்கு பெண் கொடிகள் 10 இற்கு ஆண் கொடி 01 இருத்தல் பொருத்தமானதாகும்.
- மாலை 7 மணியளவில் பூக்கள் பூக்கத் தொடங்கி பூச்சிகளால் மகரந்தச் சேர்க்கை நடை பெறுகின்றது.
- இப்பூக்கள் மறுநாள் காலை 07 - 08 மணி வரை திறந்திருக்கும்.
- வெவ்வேறு சிறப்பியல்புகள் உடைய பெண், ஆண் கொடிகள் காணப்படுவதுடன் வெவ்வேறு வடிவங்களில் காய்களும் உண்டு.

**மண்:**

- ஒரு மீற்றர் ஆழமான இருவாட்டி மண் பயிர்ச் செய்கைக்கு பொருத்தமானது.
- பி.எச் வீச்சு 06 - 07 ஆகும்.

**நிலப் பண்படுத்தல்:**

நிலத்தினை உழாது களையினை கட்டுப்படுத்தி மட்டும் அல்லது 30 சென்ரி மீற்றர் ஆழத்திற்கு உழுது மண் கட்டிகளை தூர்வையாக்குவதன் மூலம் பயிர் செய்வதற்கு நிலத்தினை தயார்படுத்திக் கொள்ள முடியும்.

**சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்கள்:**

- விசல் - பெண் தாவரமாகும்

- கேசர - பெண் தாவரமாகும்
- தும்பக்கா - பெண் தாவரமாகும்
- கோலிகா - பெண் தாவரமாகும்
- பரக்கும் - ஆண் தாவரமாகும்

**கலப்பின வர்க்கம்**

சந்த

- பெண் கலப்பு வர்க்கமாகும்.
- இவ்வர்க்கம் அதிகமாக பயிர்ச் செய்கை செய்யப்படுவதினால் மிகவும் பிரபல்யமானதாகும்.
- காய் நீள்வட்ட வடிவமாகும்.
- மற்றைய வர்க்கங்களை விட பெரிய காய்களினைக் கொண்டிருக்கும்.
- கடும் பச்சை நிறத்தில் காணப்படும்.
- பழத்தின் மேற்பரப்பு முகடுகள் குறுகியதும் கடினமானதும் ஆகும்.
- மலர்கள் பெரியவை, வெளிர் மஞ்சள் நிறமானவை.
- பூவின் அடிப்பகுதியில் 03 கரும் புள்ளிகள் காணப்படும்.
- ஒரு ஹெக்டேருக்கு 23 - 30 தொன் விளைச்சல் கிடைக்கும்.

**நடுகைக் காலம் :**

வீட்டுத் தோட்டம் மற்றும் வணிக பயிராக பயிரிடும் போது ஆண்டின் எந்த ஒரு நேரத்திலும் நடுகை செய்ய முடியும்.

வணிக பயிராக பயிர் செய்வதற்கு உலர் வலயத்தை மட்டுமே தேர்ந் தெடுத்தல் சிறந்தது.

**விதை / கன்று**
**தேவை :**

- பெண் தாவரம் ( காய் தும்பை தாவரம்) - ஹெக்டேயருக்கு கன்று 3000 - 6000
- ஆண் தாவரம் (பூ தும்பை தாவரம்) - ஹெக்டேயருக்கு கன்று 300 - 600
- இத்தாவரத்தில் கிழங்கு, வேர், விதை, கிளை துண்டங்களின் மூலம் கன்றுகளை பெறலாம்.
- கிளை துண்டங்களின் மூலம் கன்றுகளை பெறுதல் மிகவும் இலகுவானதும்இலாபகரமானதுமான முறையாகும்





**கன்றினை நடுதல்:**

- நிலத்தினை பண்படுத்தினால் 30* 30* 30* செ.மீ அளவான குழியும். நிலத்தினை பண்படுத்தாவிட்டால் 45* 45* 45 செ.மீ அளவான குழிகளை தயார் செய்ய வேண்டும்.
- மேல் மண் 02 பங்கிற்கு சேதன பசளை 01 பங்கு கலந்து குழியின் அடியிலிருந்து 10 செ.மீ உயரத்திற்கு குழியினை நிரப்ப வேண்டும்.
- ஒரு குழியில் 01 கிலோ உமி கரியை சேர்த்து மண்வெட்டியால் கிளறி விட வேண்டும்.
- தரிசு மண்ணாயின் அடிக்கட்டு பசளை கலவையின் பரிந்துரைக்கப் பட்ட அளவு கலவையையும் சேர்த்து கலக்க வேண்டும்.
- ஒரு குழிக்கு ஒரு நாற்றை நடுதல் வேண்டும்.
- 10 பெண் நாற்றுகளுக்கு 01 ஆண் நாற்று எனும் விகிதாசாரத்தில் நடுதல் வேண்டும்.
- செயற்கை மகரந்தச் சேர்க்கை செய்வதாயின் ஆண் நாற்றுகளை தனி வரிசையில் நடுகை செய்ய வேண்டும்.
- மாலையில் நடுதல் சிறந்தது. வெயிலில் இருந்து பாதுகாக்க நிழல் படுத்த வேண்டும்.
- தாவரத்தை ஆதாரத்துடன் கயிற்றின் மூலம் கட்டுதல் வேண்டும்.

**இடைவெளி :**

- வேலி முறையில் மற்றும் பந்தல் முறையில்
- வரிசை இடையே - 1.5 மீற்றர்
- நாற்றுகளுக்கு இடையில் - 02 மீற்றர்

**பசளை பிரயோகம் :**

- 02 மாதத்திற்கு ஒரு தடவை ஒரு குழிக்கு சேதன பசளை 06 கிலோகிராம் இடுவதன் மூலம் வெற்றிகரமான விளைச்சலினை பெற முடியும்.


**செயற்கையாக மகரந்தச் சேர்க்கை செய்தல் :**

- உயர் விளைச்சலுக்கு செயற்கை மகரந்தச் சேர்க்கை செய்தல் அவசியம் ஆகும்.
- தும்பை பூக்கள் இரவில் பூப்பதனால் மகரந்தச் சேர்க்கையை முடியுமான வரை காலையிலேயே மேற்கொள்ளல் வேண்டும்.
- அதிகாலை 5.30 மணிக்கு முன் ஆண் பூக்களை ஒரு தட்டில் பறித்து ஆண் பூக்களின் இதழ்களை மடக்கி மகரந்தத்தை பெண் பூக்களின் குறியில் பூச வேண்டும்.
- மகரந்தச் சேர்க்கையினை காலை 9.00 மணிக்கு நிறைவு செய்தல் வேண்டும்.

**அறுவடை செய்தல் :**

- முதல் அறுவடை காலமானது பயிர் நடும் முறைக்கமைய பின் வருமாறு வேறுபடும்.
- விதை மூலம் - 03 மாதங்கள்
- கிழங்கு மூலம் - 02 – 2 1/2 மாதங்கள்
- கொடிகள் - 02 - 2 1/2 மாதங்கள்
- தரிசுநில செய்கை - 55 - 60 நாட்கள்
- வாரம் இருமுறை அறுவடை செய்யலாம்.
- மகரந்தச் சேர்க்கையின் பின் 14 நாட்களில் அறுவடை செய்யலாம்.

***



# தெருக்கிணறு

சா. கா. பாரதி ராஜா - செங்கல்பட்டு-603101

எல்லோருக்கும்
பயன்படும் என
வெட்டப்பட்ட கிணறு

அடிவயிறு
சுரந்து தந்த
கிணற்றின் நீரைக் கண்டதும்

குழந்தையைக் கண்டது போல்
பெருமகிழ்ச்சி கொண்டனர்

சுரந்த கிணற்றைப்
பெற்றெடுத்த தாயைப் போல்
பாராட்டிக் களித்தனர்

மலையிலிருக்கும் தேன்
மண்ணில் வந்ததாய்
ருசித்துக் குடித்தனர்

பல வீட்டுக் கதைகளைக்
கேட்டுக் கொண்டே
இராட்டினம் தண்ணீரை
வாரி வாரி இறைத்தது

தண்ணீரை சுரந்து சுரந்து
எல்லோருக்கும் அளிக்கும்
கிணற்றுக்கும்
அவ்வப்போது உண்டாகும்
கொலுசணியும் ஆசை

வாளியை இழுத்து
தனக்குள் மறைத்து
கொலுசு அணிந்து
மகழ்வாள்

ஒரு தவளை முதலில் குதிக்க
மீனொன்றும் தவறி விழுந்ததே!

வேப்ப மரத்தில்
பல நாளாய்
வாழ்ந்த இலை
கிணற்றுக்குள் விழுந்து
தண்ணீரின் மேலே
அவ்வப்போது பயணப்பட்டதே!

கண்ணீர் துடைக்க
தலையணை போதாதென
கிணற்று நீரால்
கண்ணீரைத் துடைத்தாள்
ஒருத்தி

அவளையும்
அணைத்துக் கொண்டது
கிணறு

வானிலிருந்த நிலவை
தனக்குள் வர வைத்து
தவளைக்கும்
மீனுக்கும்
அதன் மேல்
நீந்தக் கற்றுக் கொடுத்தது

காலங்கள்
கடந்ததில்
கிணற்றின்
வயிறு சுருங்கி விட
நீரைச் சுமக்கவில்லை

துர்மணத்துடன்
வயிறு முழுவதும்
நிரம்பிக் கிடக்கும்
குப்பைகள்

# நோன்பினை நோற்போம் வாரீர்

வல்லவன் அல்லாஹ் தந்த
வளமான நோன்பு தனை
எல்லோரும் நோற்று அந்த
ஏகோனின் அருளைப் பெறுவோம்

இல்லாதோர் இரந்து வந்தால்
இருப்பதை ஈந்த வரின்
உள்ளத்தை மகிழச் செய்து
உயர் நற்கூலி பெறுவோம்

இரவிலே விழித். திருந்து
இறைவனை நீண்ட நேரம்
சிரத்துடன் வணங்கி உயர்ந்த
சுவனத்தை அடைந்து கொள்வோம்

அதிகாலை எழுந்து கொஞ்சம்
ஆகாரம் உண்டு பின்னர்
விதியான நோன்பு தனை
விழிப்புடன் நோற்றுக் கொள்வோம்

பொய்யுடன் களவு சூது
பொல்லாத பொறாமை தனை
கையோடு கழுவிக் கொள்வோம்
கடமையை ஏற்றுக் கொள்வோம்.

**ஜோதி சாலிஹ்**



# பணத் தோட்டம்

D .ஸ்ரீதரன்

வாழ்வதற்கு பணம் தேவையாக இருக்கிறது பணம் சம்பாதிக்கவோ நீ வாழ்வை தொலைக்க வேண்டியிருக்கிறது இது ஒரு பொல்லாத வளையம். நீ வாழ பணம் தேவை பணம் தேவையானால் ஒத்துப்போக வேண்டும் பிறகு வாழ உன்னிடம் வாழ்க்கையிருக்காது பணம் மட்டுமேயிருக்கும். பிரச்சினை இவ்வளவு குழப்பமாக இருக்கிறதே. ஓய்வூதியம் அல்லது செட்டிலான பின் ஓய்வாக இருக்கலாமென மக்கள் நம்புகிறார்கள்.

இதுவும் பிரச்சினைதான். ஒருவன் தொடர்ந்து வாழ்வை தள்ளிப் போட்டுக் கொண்டே இருந்தால் தள்ளிப் போடும் தன்மையே அவன் மனதில் ஒரு பாகமாகி அவன் அமைப்பாகிவிடும்.

ஓய்வுக்கு பின் காட்டுக்கு சென்று நான் வாழ்வேன் என்று இருபது வருடங்கள் தள்ளிப் போட்டபின் தள்ளி போடுதல் ஒரு தன்மையாகிவிடும்.

நாளை நாளையென்று முப்ப தாண்டு தள்ளிப் போட்டபின் முப்பது வருடத்திற்கு பிறகு பென்சன் கிடைக்கும். ஆனால் முப்பது வருடம் பழக்கமான நாளும் உன் கூடவே இருக்கும். திடீரென அதை விட முடியாது. அது உன்னுடனேயே தங்கியிருக்கும் நீ சிக்கிக் கொண்டாய். இது வரைக்கும் ஒரு நம்பிக்கையிருந்தது. இனி அதுவுமில்லை. இவ்வளவு காலம் நாம் ஓய்வூதியம் பெற்று ஓய்வாக இருப்போம் என்ற நம்பிக்கையாவது இருந்தது.


இனி ஆடலாம், பாடலாம் விரும்பியதை செய்யலாம். ஏனெனில் பணப் பிரச்சினையில்லை. ஆனால் ஓய்வுக்குப்பின்ஒருவன்வெறுமையையே உணர்வான். அவனுக்கு ஒரே மாதிரி தான் வாழ முடியும். 'நாளைக்கு வாழ்ந்து கொள்ளலாம் என்பதே அது'

ஓய்வு பெற்றபின் ஒருவனது வாழ்க்கை ஒரு பயங்கர கனவு போல ஆகிவிடுகிறது. அவன் அநேகமாக பயனற்றபொருட்களோடுஎறியப்படுகிறான். யார் கவலைப் படுவார் அவனைப் பற்றி.. நாம் பயனற்றவர் என்ற எண்ணம் வந்த நாள் முதலே அவன் தற்கொலை செய்து கொள்ளத் துவங்கி விட்டான் என்று அர்த்தம்.

எனவே தோழர்களே. காலத்தை வீணாக்காதீர்கள்! பணம் தேவைதான் அதுவே வாழ்வல்ல.

ஆனந்தம் என்பது இந்த நிமிடம் வருவதன்றி நாளை வருவதல்ல. நாளை வருவதென்பது நடக்குமா நடக்காதா என்ற எதிர்காலமே!

வாழ்க்கை இங்கு இப்பொழுது மட்டும். அதை இன்றே வாழ்ந்து பாருங்கள்!



# ரமழான் மாதத்தின் சிறப்பு

ரமழான் மாதம் வந்து விட்டால் சொர்க்கத்தின் வாசல்கள் திறக்கப் படுகின்றன. நரகத்தின் வாயில்கள் அடைக்கப் படுகின்றன. ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றனர் என நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள் அறிவிப்பவர் அபூ ஹுரைரா (ரலி ) நூல் புஹாரி 1899 , முஸ்லீம் 1957

ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது முஸ்லீம்கள் மீது கடமையாக்கப்பட்ட வணக்கமாகும். இந்த மாதத்தில் யார் ஈமானுடன் அல்லாஹ்விடம் கூலியை எதிர் பார்த்து நோன்பு நோற்கிறாரோ அவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. நோன்பு பசி, தாகம் மற்றும் மனோ இச்சைகளைக் கட்டுப்படுத்தி தக்வாவை வளர்த்துக் கொள்ளும் ஒரு சிறந்த வணக்கமாகும். நோன்பு இறைவனுக்குரியது அதற்குரிய கூலியை இறைவனே வழங்குகிறான்.

ரமழான் மாதம் எத்தகையது என்றால் அதில் தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும் நேர் வழியைத் தெளிவுபடுத்தக் கூடியதாகவும், சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறியக் கூடியதாகவும் உள்ள அல் குரான் இறக்கி வைக்கப்பட்டுள்ளது . எனவே உங்களில் யார் அந்த மாதத்தை அடைகிறாரோ அவர் அதில் நோன்பு நோற்கட்டும் .

யார் நோயாளியாகவோ அல்லது பயணத்தில் இருக்கிறார்களோ அவர்கள் வேறு நாட்களில் கணக்கிட்டு நோற்றுக் கொள்ளவும். அல்லாஹ் உங்களுக்கு இலகுவையே விரும்புகிறான் அவன் உங்களுக்கு கஷ்டத்தை விரும்பவில்லை. மேலும், இறைவனிடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நோன்புக்கு உரிய கூலி சுவனமே!

சுவனத்துக்குப் பல வாயில்கள் உள்ளன அதில் ஒன்றுதான் "ரய்யான்" என்பதாகும் நோன்பாளிகள் விசேடமாக அந்த வாயில் வழியாக சுவனம் செல்லுகின்ற பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ளுவார்கள் .

நபி (ஸல்) அவர்கள் நோன்பு ஒரு கேடயமாகும் என்று கூறினார்கள் ஆம்! அது மறுமையில் நரகத்தில் இருந்து நம்மை பாதுகாக்கும் மிகப்பெரிய கேடயமாகும். அது மட்டுமல்ல சங்கை மிக்க இந்த ரமழான் மாதத்தில் தான் அல்லாஹ் புனித மிக்க லைலத்துல் கத்ர் இரவையும் தன அடியார்களுக்கு பரிசாகத் தந்து இருக்கிறான். இந்த ஓர் இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது. இந்த ஒரு இரவில் செய்யப்படுகின்ற நன்மைக்கு ஆயிரம் மாதங்கள் செய்கின்ற நன்மைகளின் கூலி வழங்கப்படுகிறது. இந்த மகத்துவம் மிக்க இரவு ரமழான் மாதத்தின் கடைசிப் பத்து இரவுகளில் ஒற்றைப் படை உள்ள ஒரு இரவில் மறைந்து உள்ளது .

எனவே, இந்த ரமழான் மாதத்தை அடைந்திருக்கின்ற நாம் லைலத்துல் கத்ர் இரவின் பாக்கியங்களை முழுமையாக பெற்றுக் கொண்ட கூட்டத்தில் நம் அனைவரையும் ஆக்கிக் கொள்ள பிரார்த்திப்போம். அல்லாஹ் எங்கள் அனைவரினதும் அமல் இபாதத்துகளையும் பொருந்திக் கொள்வானாக! ஆமீன்!

**காத்தான்குடி ஜுவைரியா**




# ஹிஜாஸ் ரயில் பாதைத் திட்டம்

வரலாற்றின் பக்கங்களிலிருந்து

முன்பெல்லாம் ஹஜ் அல்லது உம்ரா என்று கூறினால் அக்கால யாத்திரிகர்கள் கப்பலிலும் காலாற நடந்து சென்ற கதைகளை நம் பெரியோர்கள் கூறும் போது அவர்களைச் சுற்றியமர்ந்து கண்கள் சிமிட்டாமல் ஆர்வத்தோடு கேட்ட ஞாபகங்களே எம் மனதினுள் பளிச்சிட்டுச் செல்லும். அந்த தியாகங் கலந்த புனித யாத்திரையை இலகுவாக்கிய அதிசயமாம் அடர் கரும் புகையைக் கக்கும் இராட்சத இரும்பு வண்டிகளின் யுகம், அதாவது புகையிரதங்களின் யுகத்தினுள் நாம் நுழைந்து ஒருசில நூற்றாண்டுகளேயாயின.

அந்த யுகத்தில், வரலாறு தெரிந்த தம் அடையாளம் அறிந்த இஸ்லாமியர்களால் இன்றுவரை போற்றப்படும் ஓர் உன்னத ஆட்சியாளரான கலீபா-சுல்தான் இரண்டாம் அப்துல்ஹமீத் ஹான் அவர்கள் இஸ்லாமிய உலகினதும், உஸ்மானிய சாம்ராஜ்யத்திலும் அரியணையை ஒருங்கே அலங்கரித்தார். சுருங்கக் கூறின் சரிவை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த இஸ்லாமிய கிலாபாவிற்கு புத்துயிர்க் கொடுத்து அதன் வீழ்ச்சியை பிற்படுத்திய பெருமை இவரையே சாருமெனக் கூறினால் அது மிகையாகாது. அரண்மனையின் மதில்களுக்குள் இருந்த வண்ணம் பரந்த உஸ்மானிய சாம்ராஜ்ஜியத்தை ஆட்சி செய்தது மட்டுமல்லாமல் பிரித்தானியா, ரஷ்யா மற்றும் இதர ஐரோப்பிய தேசங்களின் அரசவைகளில் எடுக்கப்படும் முடிவுகள் செயற்பாட்டிற்கு வரும் முன்பே, அவை இவரின் காதுகளை வந்தடைந்திடும். அந்தளவிற்கு மிகவும் திறமையான ஒற்றர்களுடன் கூடிய பலமான, துல்லியமான மற்றும் வேகமான தோர் உளவுப்பிரிவினை அவர் கட்டியெழுப்பி அதனைத்



105 வருடங்களுக்கு முன்பு ஹிஜாஸ் ரயில் பாதையில் யாத்திரிகர்களைத் தாங்கிச் செல்லப் பணிக்கப்பட்டிருந்த ஓர் உஸ்மானிய ரயில் என்ஞுமுனானது அரேபியாவின் லோரன்ஸ் எனும் நயவஞ்சகனால் வழிநாடத்தப்பட்ட அரபுகளின் கொரில்லாத் தாக்குதலினால் பாலை மண்ணில் இன்றும் உறங்கிக் கொண்டிருக்கிறது.


தன் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார். அவரது இந்த உளவுப்பிரிவின் வலையமைப்போ ஜப்பான் தொட்டு அமெரிக்கா வரை எனப் பரந்து விரிந்திருந்த அதேசமயம் சுமார் 3000 க்கும் அதிகமான உளவுத் தகவல்கள் அவரது அந்தரங்க அறையில் தினமும் குவிந்திருக்கும். சுருங்கக் கூறின், அவரது இந்த உளவுப்பிரிவு உஸ்மானிய சாம்ராஜ்ஜியத்தின் முதுகெலும்பாக செயற்பட்டதுடன் மேலும் அது இன்றைய சி.ஐ.ஏ மற்றும் மொஸாட் போன்ற உளவு அமைப்புக்களுக்கு முன்னோடியாகவும் இருந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வாறு கிலாபத்தின் வீழ்ச்சியை தவிர்ப்பதற்காக, பல நடவடிக்கைகளைக் கையாண்ட அவர் கி.பி. 1900 களின் துவக்கத்தில் ஓர் மாபெரும் திட்டத்தை, தன் அரசவை அமைச்சர்களான பாஷாக்களிடம் சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீத் ஹான் அவர்கள் முன் மொழிந்தார். அத் திட்டமே பிற்காலத்தில் ஹிஜாஸ் ரயில்வே திட்டம் எனும் இரும்புப் பாதைகளாக அரேபிய பாலை நிலங்களின் வழியே நீண்டுச் சென்றன. அதன் உயரிய நோக்கமோ பரந்த இஸ்லாமிய உலகின் அன்றைய தலைநகராக இருந்த இஸ்தான்புலில் இருந்து முன்பு ஷாம் தேசம் என அழைக்கப் பட்ட சிரியாவின் டமாஸ்கஸ் நகரினூடாகச் சென்று பின்னர் ஹிஜாஸ் மாநிலத்தின் மதீனாவை அடைந்து இறுதியில் அது மக்கா வரை ஹஜ், உம்ரா யாத்திரிகர்களைக் கொண்டு சேர்ப்பதாக இருந்ததுடன், மேலும் அவர்களது பயண அசௌகரியங்களைக் குறைத்து வெறும் மூன்று நாட்களுக்குள் இஸ்தான்புலில் இருந்து மக்காவைச் சென்றடையக்கூடியதாகவும் இருந்தது.

இதன் நோக்கம் மக்கா மதீனாவை இணைப்பதோடு நில்லாமல் ஏற்கனவே செயற்பாட்டிலிருந்த பக்தாத் ரயில் பாதைத் திட்டத்துடன் இந்த ஹிஜாஸ் ரயில்வே திட்டத்தையும் இணைத்து கிழக்கையும் மேற்கையும் அகபாவினூடாகக் கட்டிப்போட்டு ஆங்கிலேயரின் சுயஸ் கால்வாயின் கப்பல் வர்த்தகச்

செல்வாக்கினை இல்லாமல் செய்வதும் மற்றும் பக்தாத் ரயில்வே பாதையினை மேலும் கிழக்கின் பக்கமாக ஊடுருவும் வகையில் அபிவிருத்தி செய்வதினூடாக ஹிந்துஸ்தானிய முஸ்லீம்களையும் அச்சே சுல்தானியம் என அறியப்பட்ட இன்றைய இந்தோனேஷிய முஸ்லீம்களையும் ஐரோப்பிய காலனித்துவப் பிடியிலிருந்து காப்பாற்றுவதுமே சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீத் ஹான் அவர்களின் மறைமுகத் திட்டமாகவும் இருந்தது. அதாவது சுருங்கக் கூறின் ஒட்டு மொத்த இஸ்லாமிய உலகையும் இரும்புப் பாதைகள் மூலமாக இணைத்திடுவதே இத் திட்டத்தின் உயரிய நோக்கமாகும். ஆதலால் இத் திட்டம் பிரித்தானியா மற்றும் ரஷ்யா போன்ற சாம்ராஜ்யங்களை தூங்க விடாமல் செய்ததுடன் அதனை எப்படியேனும் தடுத்து நிறுத்திட அவர்கள் அரசியல் மற்றும் பொருளாதாரக் கெடுபிடிகள் மற்றும் போர் என எந்த எல்லைக்கும் செல்லத் தயங்கிடவில்லை. அதேசமயம், அவர்களது இந்த நடவடிக்கைகளுக்கு சுல்தான் இரண்டாம் அப்துல்ஹமீத் ஹான் அவர்கள் முன்ஆயத்தங்களுடன் செயற்பட்டு, அவற்றிக்குத் தக்க பதில் நடவடிக்கைகளை அவர் எடுக்கவும் செய்தார்.

ஆயினும் இந்த ரயில் பாதைக்கான திட்டங்களை வகுத்தாலும் வகுத்த திட்டங்களை செயற்படுத்த பாரியளவிலான நிதியின் தேவையிருந்தது. மேலும் அச்சமயத்தில் நிதியைத் திரட்டுவது என்பது மாபெரும் சவாலான விடயமாக இருந்தது. ஏனெனில், சாம்ராஜ்யம் அப்போதுதான் சர்வதேசக் கடன்களில் இருந்து மெல்ல மெல்ல விடுபட்டுக் கொண்டிருந்தது. ஆதலால் சுல்தான் அப்துல்ஹமீத் ஹான் அவர்கள் ஓர் முடிவுக்கு வந்தார். “இத்திட்டத்தை நாம் முஸ்லீம் உம்மத் (எனும் சமூகத்) திற்காகவே துவங்குகிறோம், ஆகவே நாம் அவர்களிடமே இதற்கான உதவிகளைக் கோருவோம்” என இஸ்லாமிய உலகின் கலீபா எனும் வகையில் உலகிலுள்ள ஒட்டுமொத்த முஸ்லீம்களையும் இந்த




**டமஸ்கஸ் துவக்கும் புனித மதீனா நகர் வரை செல்லும் ஹிஜாஸ் ரயில் பாதைத் திட்டம்**

ஹிஜாஸ் ரயில்வே திட்டத்திற்காக நிதியுதவி செய்யும்படி அவர் அழைப்பு விடுத்தார். உலகின் பல திக்குகளில் இருந்தும் ரயில் பாதை கட்டுமானப் பணிக்கான நிதிகள் உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் தலைநகரை நோக்கி வந்து



ஹிஜாஸ் புகையரத நிலையம் - மதீனா

சேர்ந்தன. மேலும் ஹிந்துஸ்தானிய முஸ்லீம்களிடமிருந்தே பெரும்பாலான நிதியுதவிகள் வந்து சேர்ந்தன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட நிதிகளைக் கொண்டு மெல்ல மெல்ல பல தடைகளைக் கடந்து முக்தார் பே என்பவர் தலைமை பொறியியலாளராக இருக்க, அவருடன் ஜெர்மானிய ரயிற் பொறியியலாளர்களும் சேர, ஹிஜாஸ் ரயில் பாதைக்கான வேலைகள் ஆரம்பமாகின.

இவ்வாறு ரயில் பாதைகள் அரபுக் கோத்திரங்களின் கிளர்ச்சிகளை சந்தித்த வண்ணம் எவ்வாறோ மதீனாவின் எல்லையை அடைந்ததும், சுல்தான் அப்துல்ஹமீத் ஹான் அவர்கள் ஓர் வினோதமான கட்டளையைப் பிறப்பித்தார். அதாவது, “ரயில்வே கட்டுமானப் பணிகளின் போது பயன்படுத்தப்படும் சுத்தியல்கள் ஒட்டகத் தோலினால் சுற்றப்பட வேண்டும்” என்பதே அந்தக் கட்டளையாக இருந்தது.

அதற்கு ஓரழகிய காரணமும் இருந்தது, மதீனா என்பது மாநபி (ஸல்) அவர்கள் வாழ்ந்து மரணித்து நல்லடக்கம் செய்யப்பட்ட புனித பூமியாகும். அதாவது அது மாநபி (ஸல்) அவர்களது நேசத்திற்குரிய நகரமாகும். மேலும் நபிமார்களின் உடலை பூமி உண்ணுவதில்லை. அதே போல் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் நாம் அவரின் பெயரில் கூறிடும் ஸலவாத்துக்கள் மலக்குமார்கள் எனும் வானவர்கள் வாயிலாக அவரிடம் எத்தி வைக்கப்படுகின்றன. சுருங்கக் கூறின் மாநபி (ஸல்) அவர்கள் அவரது மண்ணறையில் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் நாம் எக்காரணம் கொண்டும் அவரை தொந்தரவு செய்வது கூடாது என்பதற்காகவே சுல்தான் இரண்டாம் அப்துல்ஹமீத் ஹான் அவர்கள் அவ்வாறனதொரு கட்டளையைப் பிறப்பிக்கக் காரணமாகும்.

ரயில் பாதைகளின் கட்டுமானப் பணிகள் முடிவுற்று புகையிரதம் மதீனாவை வந்தடையும் போதும் இதே யுக்தியை சுல்தான் அப்துல்ஹமீத் ஹான் அவர்கள் கையாண்டார். அதாவது புகையிரதம் மதீனாவின் எல்லையை அடையும் போது அதன் இரு புறத்திலும் அதன் அதிர்வுகளைத் தாங்கக்கூடியவாறும் அதன் சத்தத்தை வெளிச்செல்ல விடாத வகையிலும் ஒட்டகத்தின் தோல்களைக் கொண்டு மதில்கள் அமைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீத் ஹான் அவர்களது இச்செயலினாலே பிற்காலத்தில் அவரது அடக்கஸ் தலத்தின் அருகிலிருக்கும் ரயில் நிலையத்தினூடாக ரயில்கள் செல்லும் போது சத்தம் வெளிப் படாமல் இருக்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த ரயில்வே திட்டமானது மதீனாவை அடைந்து விட்டதும், இனி புனித நகரான மக்காவை நோக்கி இதன் பாதைகள் செல்லட்டும் என திட்டங்கள் வகுக்கப்பட்டன. அதற்காக வேண்டி மாநபி (ஸல்) அவர்கள் நாடு துறந்து மக்காவில் இருந்து மதீனா நோக்கிச் சென்ற ஹிஜ்ரத் பயணத்தின் போது எங்கெங்கல்லாம் இளைப்பாறினார்களோ அங்கெல்லாம் புகையிரங்கள் நிற்க வேண்டும் எனும் சுன்னாவை சுல்தான் இரண்டாம் அப்துல்ஹமீத் ஹான் அவர்கள் பின்பற்றினார். அதாவது அவ்விடங்களில் புகையிரத நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் மேலும் அவ்விடங்களில் ஓர் மஸ்ஜித் அமைக்கப்பட வேண்டும் அவற்றைச் சூழ, ஊர்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும் என மிகவும் நுணுக்கமான முறையில் அவர் திட்டங்களை வகுத்திருந்தார்.

நாட்கள் நகர்ந்தன, பரந்த இஸ்லாமிய உலகையும் உஸ்மானிய சாம்ராஜ்ஜியத்தையும் சகலவிதமான அதிகாரங்களையுங் கொண்டு சுமார் 33 வருடங்களாக ஆட்சி புரிந்த இஸ்லாத்தின் இறுதிக் கலீபாவாக கருதப்படும் சுல்தான் இரண்டாம் அப்துல்ஹமீத் ஹான் அவர்கள் மேற்குலகின் பகடைகளாக செயற்பட்ட இளம் துருக்கியர்களினால், 1909 ஆம் ஆண்டு பதவி கவிழ்க்கப் பட்டார். உஸ்மானிய சாம்ராஜ்யமோ குள்ள நரிகளின் கைகளினுள் அகப் பட்டதுடன், அது தன்னகத்தே கொண்டிருந்த கிலாபத்திற்கான சகல அதிகாரங்களை படிப்படியாக இழந்துவிட, பின்னர் அது பெயரளவில் மாத்திரம் நலிவடைந்த உஸ்மானிய சாம்ராஜ்யத்துடன் ஒட்டிக் கொண்டது. இடையிடையே ரயில்வே திட்டத்தை தடுக்கும் வகையில் “அரேபியாவின் லோரன்ஸ்” எனும் பிரித்தானிய உளவாளியின் தலைமையின் கீழ் மூளைச் சலவை செய்யப்பட்ட சுதேச அரபுக் கோத்திரங்களின் தாக்குதல்களுக்கு பலதடவை இலக்காகியது. சில தரவுகளின் படி சுமார் 300 க்கும் மேற்பட்ட தாக்குதல்கள் ஹிஜாஸ் ரயில்வேயின் மீது நடாத்தப்பட்டன என்றும் கூறப்படுகிறது. இதனால் ரயில் பாதை வழியாக மதீனாவுடன் மக்காவை இணைக்கும் திட்டம் நிறைவேறாமல் போனது.

இதன் காரணமாகவே முதலாம் உலகப் போர் வெடித்த சமயத்தில் உஸ்மானிய கிலாபத்தின் அடையாளமாக திகழ்ந்த மக்கா நகரை மிகவும் எளிதாக, பாரிய போராட்டங்கள் ஏதுமின்றி பிரித்தானியர் உதவியுடன் செயற் பட்ட ஹாஷிமீய்ய அரபுக் கிளர்ச்சியாளர்களிடம் பறி கொடுத்தது. மேலும் ஹிஜாஸ் ரயில்வே மீது நடாத்தப் பட்ட தொடர் தாக்குதல்களால் மதீனா முற்றுகையிலிருந்து உஸ்மானியர்கள் பின்வாங்கும் நிலைக்குத் தள்ளப் பட்டதுடன் பிரித்தானியரின் உதவியுடன் ஹாஷிமீய்ய அரபுக் கிளர்ச்சியாளர்கள் மதீனாவையும் கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து உலகப் போரினாலும், ஊழலினாலும் சாம்ராஜ்யத்தின் கஜானா வெறுமை யடைந்தது. எந்தளவிற்கெனில், அப்போதைய இளம் துருக்கிய அரசினால், சாம்ராஜ்யத்தின் அரச அதிகாரிகளுக்கும், போர் முனையிலுள்ள படை வீரர்களுக்கும் ஊதியம் வழங்கிட இயலாமல் அவர்களால் பதவி கவிழ்க்கப்பட்டு இன்று கிரேக்கத்திலிருக்கும் அன்றைய உஸ்மானியர்களின் ஆளுகைக்குட் பட்டிருந்த செலானிக் துறைமுக நகருக்கு, நாடுகடத்தப்பட்ட சுல்தான் அப்துல்ஹமீத் ஹான் அவர்களிடம் அவர் இளவரசராக இருந்த கால கட்டத்தில் வியாபாரம் மூலம் ஈட்டிய சொத்துகளையும் மேலும் அவரது தனிப்பட்ட கஜானாவின் செல்வங்களையும் கேட்டுப் பெறுமளவு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது.

உலகப்போரில் உஸ்மானியர்கள் அணி சேர்ந்த கட்சி தோல்வியுற்றது. சுமார் 5 நூற்றாண்டுகளாக இஸ்லாமிய உலகின் தலைநகராய் விளங்கி அதனை அலங்கரித்த அழகிய நகராம் இஸ்தான்புல் நேச நாட்டு படைகளினால் சூறையாடப் பட்டு, சாம்ராஜ்யம் துண்டாடப் பட்டது. இதனாலேயே சுமார் 623 ஆண்டுகள் பழமையான உஸ்மானிய சாம்ராஜ்யமும் அதன் கிலாபத்தும் வீழ்ந்தது. மேலும் ஹிஜாஸ் ரயில்வே திட்டங்கள் ஊடுருவிச் சென்ற பிரதேசங்கள் தம்மை தனித் தனிநாடுகளாக பிரகடனப்படுத்தப் படுத்திக் கொண்டன. இதுபோன்ற காரணங்களால் ஜோர்தான் போன்ற ஒருசில பிராந்தியங்களைத் தவிர ஒட்டுமொத்த ஹிஜாஸ் ரயில் பாதைத் திட்டமானது நிரந்தரமாக மூடப்பட்டதுடன் இஸ்லாமிய உலகை ஒன்றிணைக்கும் திட்டமும் இன்றுவரை மீளாத உறக்கத்தினுள் ஆழ்ந்தும் விட்டது.

அதன் சுவடுகளை இன்றளவும் கூட காணலாம்,

"துரோகம்" எனும் புழுதி படர்ந்த அராபியப் பாலைவனங்களிலும்,

"வஹ்ன்" எனும் புழுதி படிந்த எம் இதயங்களிலும்.

வஹ்ன் - உலகின் மீதான பற்று.

**கன்ஜுல் மஹ்ஜபீன்**

***



# புதைக்கப்பட்ட உணர்வுகள்

--------------------------மக்கொனை நிலா

“பூ..தாத்தா... பூ..தாத்தா...” என்று ஆயிஷாவின் கதவைத் தட்டுகிறாள் அஸ்மா.

“ஓ..அஸ்மா..சொல்லுங்க...என்ன...?” என்று கேட்டுக்கொண்டே வெளியே வருகிறாள் ஆயிஷா.

“தாத்தா... உஸ்மானும் ஹபீபாவும் ரூம்ல தூக்கம்.. அவங்களுக்கு போத்தல்ல மில்க் ஊத்தி வெச்சிருக்கிறன்... எழும்பினால் குடுங்க. நான் இவரோட கொழும்புக்கு பெய்ட்டு வாரன்...”

“ஆ..சரி... மில்க் போத்தல் எங்க...? ரூம்லயா..?”

“ஓ.. கப்போர்ட்டுக்கு மேல...” என சொல்லிக் கொண்டு காலை வேளையிலே அஸ்மா புறப்பட்டு விட்டாள்.

பூ..தாத்தா அவள் தான் ஆயிஷா... வீட்டின் மூத்த பிள்ளை. அவளுக்குப் பின் இரண்டு தங்கைகள் மற்றும் ஒரு தம்பி. நான்கு பிள்ளைகளிலும் அவள் தான் அழகானவள். படிப்பிலும் கெட்டிக்காரி. சிறுவயதிலிருந்தே படிப்பு, உடை, வீட்டுவேலை என்பவற்றில் நேர்த்தியாக இருக்கிறாள். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தன் தாயின் அலுமாரியை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தாள். இவ்வாறு ஒவ்வொரு பொருளாக அடுக்கிக் கொண்டிருக்கும் போது, ஒரு மஞ்சள் நிறப் பை ‘பொத்’ என்று கீழே விழுந்தது. உடனே அந்தப்பையை எடுத்து தூசியைத்தட்டி திறந்து பார்க்கிறாள். முகத்தில் அமைதியான புன்னகை. ஆம், அது அவளுடைய குடும்பத்தின் புகைப்பட ஆல்பம். மற்றைய வேலைகளை அப்படியே போட்டு விட்டு ஆல்பத்தை ஆவலுடன் திறந்து பார்க்கிறாள். ஆங்காங்கே இருந்த தூசிகளைத் தன் கைகளால் துடைத்துக்கொண்டே படங்களை

நோட்டமிடுகிறாள். ஒவ்வொரு படமும் அவளது பழைய நினைவுகளை அழகழகாய் மீட்டெடுக்கின்றன. அவளது குடும்ப புகைப்படமொன்று அவளை ஆழ்ந்த சிந்தனைக்கு கொண்டு போனது. அந்தப் புகைப் படத்தில் தாய்,தந்தை மற்றும் அவளுடைய தம்பி தங்கைகள் என்று அழகாய் தெரிந்தனர். இது அவள் எட்டாம் ஆண்டு படிக்கும் போது நுவரெலியாவுக்கு சென்றிருந்த வேளை 'கிரெகெரி' பூங்காவில் எடுக்கப்பட்ட புகைப்படம். தொட்டுத் தொட்டுப் பார்க்கிறாள். அப்படியொரு பூரிப்பு. எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழ்ந்து வந்த குடும்பம். இது தான் குடும்பமாய் எடுக்கப்பட்ட கடைசிப் புகைப்படம். ஆயிஷாவின் தாய், தந்தை தன் குடும்பத்தை மிகவும் மகிழ்ச்சியாக வைத்திருந்தார்கள். இவ்வாறு வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கும் போது திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பால் தாயை இழந்தார்கள். சின்னப் பிள்ளைகளோடு செய்வதறியாது ஆயிஷாவின் தகப்பன் திண்டாடிக்கொண்டு எப்படியோ வாழ்க்கையை ஓட்டினார். ஆயிஷா மூத்த பெண் பிள்ளை என்பதால் காலப் போக்கில் அவளின் பொறுப்புகள் அதிகமாகிக் கொண்டே சென்றன. அவளும் தன் குடும்பத்தை கண்ணென பார்த்துக் கொண்டிருந்தாள். படித்துக் கொண்டே அனைவரினதும் அன்றாட தேவைகளை அலுப்பின்றி செய்து வந்தாள். தம்பி தங்கைகளை தாயைப் போல கரிசனைக்காட்டி ஆதரித்து வந்தாள். எப்பொழுதும் தந்தைக்கு ஏக்கமாகவே இருந்தது தன் மனைவி இல்லையே என்று. மனைவி செய்கின்ற அனைத்து வேலைகளையும் தன் மூத்த மகள் செய்கிறது அவருக்கு ஒரு சங்கடமாகவே இருந்து வந்தது. ஆயிஷா அவளது படிப்பு, வீட்டு வேலை, சமையல் வேலை, மற்றும் ஆடை கழுவுதல் என்று இன்னோரன்ன வேலைகளை மிக சகிப்புத் தன்மையோடு செய்து வருகின்றாள்.

காலச்சக்கரம் உருண்டோடுகிறது. அவளும் உயர்தரப் பிரிவில் வணிகத் துறையில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்றுக் கொண்டிருந்தாள். எதிர்பாராத விதமாக தந்தைக்கு நோய் ஏற்பட்டு ஒரு வாரத்தில் அவரும் இறைவனடி சேர்ந்து விட்டார். இது ஆயிஷாவின் வாழ்வில் பேரிடியாக விழுந்தது. ஏதோ ஒரு வகையில் தூணாக இருந்து வந்த தகப்பனும் தற்போது இல்லையே என்ற ஆதங்கத்தில் வாழ்க்கை போராட்டத்தை நடாத்தி வந்தாள். தற்போதும் எந்தவித சோர்வுமின்றி சகோதரர்களை பரிவோடு கவனித்து வருகிறாள். எல்லாச் சுமையையும் சுமந்தவளாக வலம் வந்த ஆயிஷா விற்கு இடைக்கிடையே தலைவலி ஏற்பட அவளின் பாடசாலை மற்றும் பிரத்தியேக வகுப்புக்கான வருகை படிப்படியாக குறைவடைந்து படிப்பதிலும் கவனத்தைக் குறைத்து வந்தாள். காலப்போக்கில் அவளது தலைவலி பெரும் நோயாக மாறி விட்டது. இதனால் அவள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவில்லை. ஆயிஷா சாதாரணதரப் பரீட்சையில் ஒன்பது அதிவிஷேட சித்திகளைப் பெற்றும் விஞ்ஞானத் துறையை தெரிவு செய்யவில்லை. அவளுடைய

டாக்டராகும் ஆசை, முயற்சி, மற்றும் கனவு எல்லாம் கானல் நீராகிப் போனது. தன் குடும்பத்தை ஆதரித்து அரவணைத்துச் செல்ல வேண்டும், வேறு பாடசாலையில் தான் விஞ்ஞானத் துறை இருப்பதாலும், அதற்காக முழுக் கவனமும் செலுத்தப் படல் வேண்டும் என்பதால் வணிகத் துறையை அதே பாடசாலையில் தெரிவு செய்தாள். தரம் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் முதலாமிடம் கிடைத்ததும் தாய் ஸலீமா "ஒங்கட எம்பிஷன் என்னென்டு கேட்டால் டாக்டராக வர வேண்டும் என்டு சொல்லுங்க" என்று அப்பொழுதிலிருந்தே ஆயிஷாவுக்கு வைத்தியராகும் ஆசையையும் தைரியத்தையும் வளர்த்து வந்தாள். ஆயிஷா தனது இளமைக் காலத்திலிருந்தே ஆசைகள், அடைவுகள் அனைத்தையும் உள்ளுக்குள் பதுக்கிக் கொண்டிருக்கிறாள்.

குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்டு, அடைப்பட்டிருந்த தொண்டையை சரி செய்து கொண்டு அறையை நோக்கி ஓடுகிறாள். ஒரு வயது குழந்தை ஹபீபா வீறிட்டு அழுது கொண்டிருந்தாள். ஓடிய வேகத்தில் அவளது தொடை கட்டில் கால் பலகையில் பட்டுவிட அதையும் சுதாகரித்துக் கொண்டு அழுத குழந்தையை அள்ளி அணைக்கிறாள். இரு குழந்தைகளுக்கும் போத்தல் பாலைப் புகட்டியவாறே அணையாடைகளை மாற்றி விடுகிறாள் ஆயிஷா. சின்னவள் மீண்டும் அழ, அவளை மடியில் வைத்து தூங்க வைத்துக் கொண்டிருக்கும் போது,

"பூ..தாத்தா... நீங்க எங்க நின்ட..? புள்ள நல்லா அழுதாங்க....அஸ்மா தாத்தா இல்லயா.....?" என்று ஆயிஷாவின் அருகே வந்தாள் சிறிய தங்கை அம்ரா.

"இல்ல...அம்ரா அஸ்மாவும் ஹிஜாஸும் கொழும்புக்கு பெய்ட்டாங்க..." என்றாள் ஆயிஷா.

"அப்பிடியா..? நான் வொஷ்ரூம்ல இருந்த.... பூ.. தாத்தா....ப்ரெக்பாஸ்ட்க்கு என்ன சரி செஞ்சா...இவருக்கு பசிக்குதாம்... இல்லாட்டி என்னசரி கொண்டு வர சொல்லவா..." என ஈரம்பட்ட கைகளைத் துடைத்துக் கொண்டே கேட்கிறாள் சிறிய தங்கை அம்ரா.

ஆயிஷா கடிகாரத்தைப் பார்க்க நேரம் 9.30 ஆக இருந்தது. "அம்ரா.. புட்டு செஞ்சி வெச்சிருக்கிறன்..இப்ப காஞ்சி இருக்கும்...பால் ஊத்தி எடுங்க.." என்றாள் பணிவாய் பூ...தாத்தா. ஆயிஷாவின் இரு தங்கைகளும் ஆசிரியர்கள். இதனால் வார இறுதி நாட்களில் அவர்கள் நன்றாக உறங்கி ஓய்வெடுப்பார்கள். ஆதலால் சமையல் வேலை, வீட்டு வேலை, பிள்ளை வளர்ப்பு எல்லாமே இவளுடைய பொறுப்பாகிற்று.

பிள்ளைகளை தூங்க வைத்துவிட்டு மீண்டும் துப்பரவு பணிக்காக செல்ல அறையை எட்டும் போது எடுத்த புகைப்பட ஆல்பம் அப்படியே இருக்கிறதைக் கண்டு, அதை மீண்டும் புரட்ட அவள் கண்ணுக்குப்பட்டது அவளின் மணமகள் புகைப்படம். ஆம், அது அவள் இரண்டாம் ஆண்டு படிக்கும் போது,

இல்ல விளையாட்டின் வினோத உடை போட்டிக்காக எடுக்கப் பட்ட புகைப்படம். தலையில் கிரீடத்துடனும் கையில் இயற்கை மலர்ச் செண்டுடனும் அழகாய் மணமகள் வேடத்தில் ஆயிஷா காணப் பட்டாள். அப்பொழுது அவளை எல்லோரும் 'பொண்' ..... 'பொண்' என்று கிண்டலடித்தார்கள். தற்போது அவளது நிஜ வாழ்க்கையில் பொண் ஆகவில்லையே என்ற ஏக்கம் அவளுக்குள் நித்தம் ஏங்கிக் கொண்டிருந்து. அவள் இளமையில் இருக்கும் போதே அவளுடைய தாய், தந்தை உறவினர்கள் பல திருமணங்களை பேசி வந்தார்கள். எனினும் ஆயிஷாவை தாய் தந்தை இல்லாதவள், குடும்பத்தின் மூத்த பிள்ளை, இவளுக்குப் பின் இரு தங்கைகள், இவளுக்கு பொறுப்புகள் அதிகம், போதாக்குறைக்கு உயர் தரம் படிக்கும் போது ஏற்பட்ட தலைவலி, தந்தையின் மறைவுக்குப் பின் இவளுக்கு ஒரு வகை மனநலக்குறைவு, பேய்பிசாசு பிடித்திருக்கிறது என்று இன்னோரன்ன காரணங்களால் அவளுடைய மணவாழ்க்கை நின்று போனது. இப்படியே காலச்சக்கரம் ஓடியது.

ஆயிஷாவின் வயதும் பருமனும் அதிகரிக்க அவளுக்கான திருமணப் பேச்சு முற்றாக கைவிடப்பட்டது. மாறாக அவளுடைய இரு தங்கைகளுக்கும் எப்படியோ திருமணம் நடைபெற்றது. இருவரது பிள்ளைகளையும் ஆயிஷாவே அரவணைத்து வளர்க்கிறாள். அவளுக்குத்தான் இவை கைவந்த கலையாயிற்றே. சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு தான் தன் கடைக்குட்டி தம்பிக்கும் திருமணம் நடந்தது. அவர்கள் அனைவரும் இவளை தாய் போலவே மதிப்பும் மரியாதையும் கொடுத்து வந்தார்கள். ஆனால் அவர்கள் யாருக்கும் தெரியாது இவளுக்கும் உயிருள்ள உணர்வுகள் இருக்கின்றன என்று. மூத்த பிள்ளையாக பிறந்தது பாவமா...? நான் என்ன பாவம் செய்தேன்...? ஏன் இறைவன் என்னை சோதிக்க வேண்டும்....... நான் ஏன் பெண்ணாகப் பிறந்தேன்...? என்னால் படித்து ஒரு டாக்டராகவோ குறைந்தது ஆசிரியராகவோ முடியவில்லையே! திருமணம் முடித்து பிள்ளை வளர்ப்பதற்காலும் நான் பாக்கியம் அற்றவளா........? என்று அவள் தன்னைத்தானே அடிக்கடி கேட்டுக்கொள்கிறாள்.

தொலைபேசி ஒலிக்கிற சத்தம் கேட்டு பெருமூச்சு விட்டவளாய் ஆயிஷா, " ஆ...தம்பி சொல்லுங்க... நீங்களும் ஷானாஸும் லன்ச்சுக்கு வர்ரீங்களா....? ஆ.. ஓ.கே ரூம ரெடி பண்றன்...." என்று தொலைபேசியைத் துண்டிக்கிறாள். அறையை வெறித்துப் பார்த்தவளாக நான் ஒரு ஆணாகப் பிறந்திருந்தால் எல்லா ஆசைகளையும் அடைந்திருப்பேனோ......? நான் பிறந்திருக்கவே கூடாது......ஏன் என்னுடைய தாய் தந்தையை இறைவன் எடுத்துக் கொள்ள வேண்டும்.....? என்ற விடை தெரியாத கேள்விகளின் ஏமாற்றத்துடன் அடுத்த வேலைகளுக்காய் செல்கிறாள் ஆயிஷா.

(யாவும் கற்பனை)

***



# காலத் திகிரி 2

## தொடர் கட்டுரை



**நெல்லை. G. சோமசுந்தரி,** சென்னை- 122.
(கவிஞர், எழுத்தாளர், தொல்லியல் ஆர்வலர்)

கடற்கரையோர மணலில் நடந்து சென்று நீரில் கால் நனைக்கும் போது, உள் புதைகின்ற மணற்பரப்பில், மனமானது குழந்தையைப் போன்று குதூகலித்து ஒரு வித உற்சாகம் பெறுவதை நாம் அனைவரும் உணர்ந்திருப்போம். கரையில் நின்று பார்க்கும் போது, சமுத்திர கோட்டில் எல்லை மீறாமல் அலைகள் அடிப்பது, நமக்குச் சாதாரணமாகத் தோன்றினாலும், அவையெல்லாம், ஒரு நியதிக்குள் கட்டுப்பட்டுச்சுழலும் திகிரியாகவே இங்கு நிர்ணயம் செய்யப்படுகிறது என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

நதிமூலம் அறியாமல் பயணிக்கும் நன்னீரானது, கடல் நீரில் சங்கமிக்கும் போது அலைகள் கொண்ட முதுநீராய் (நிலத்திற்கு முன் தோன்றியது கடல் என்பதால் அதற்கு இந்த பெயர்) மாறி உவர்ப்பு தன்மையாகிறது. இந்த முதுநீரானது, சூரிய ஒளியால் ஆவியாகி, மேகவுரு எய்தி, விசும்பிற் துளியாகி, நல்ல நீராக மழையாய் பொழிந்து, மீண்டும் ஆறுகள் வாயிலாக, கடல் அடைந்து ஒரு திகிரியாய் சுழன்று தன் சக்கரச்

சுழற்சியை நிறைவு செய்கிறது

இதை ஆண்டாள் நாச்சியார்,

ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து

பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்

ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து

தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்

வாழ உலகினில் பெய்திடாய்

எனத் தொடங்கும் திருப்பாவையில் முதுநீர் திகிரி சுழற்சியாவதைப் பாடுகிறாள். இதனையே அறிவிய லாளர்கள், சூரியனுடைய வெப்பத்தால் பூமியில் காணப்படும் நீர் ஆவியாகி, (Evaporation) வளி மண்டலத்திற்கு மேல் சென்று குளிர்ந்து, நீர்த் திவலைகள் (condensation) எல்லாம் ஒன்றிணைந்து காற்றைச் சந்திக்கும் போது, கார் முகில்களை (மேகங்கள்) உருவாக்குகின்றன.அவற்றின் எடை அதிகரிக்கும் போது, (saturation) காற்றில் மிதக்க முடியாமல் புவி ஈர்ப்பு விசையின் காரணமாகப் பூமியை நோக்கி நீர்த் துளிகளாக ,மழை பொழிவாக (precipitation) விழுகின்றன என ஆய்வறிந்து குறிப்பிடுகின்றன.

அகம் நோக்கிய சிந்தனையில் கோதை நாச்சியாரின் இலக்கிய வரிகளும், விஞ்ஞானத்தின் முடிவுகளும் ஒரே நேர்க் கோட்டில் எப்படிச் சந்திக்கின்றன. என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம். இது போலவே, உருளை வடிவமாக, அந்தரத்தில் தொங்குகின்ற பூமி (ஞாலம்) போன்ற கோள்கள் ஒன்றை ஒன்று மோதிக் கொள்ளாமல் இந்த அண்டங்களைச் சுற்றி வருகின்றன. இவற்றுக்குள் இருக்கும் ஆற்றலை நம்மால் உணரமுடியுமா என்கிற கேள்வியானது எல்லோருக்குள்ளும் இருக்கும் .

அதனையே,

ஞாலத் திகிரி, முதுநீர்த் திகிரி

நடாத்தும் அந்தக்

காலத் திகிரி முதலான யாவும்

“இதனையே காலத்திகரி என்றும், முதுநீர்த்திகிரி என்றும் கொண்டால் இவையெல்லாம் காலமாகிய திகிரியில் கண்ணுக்குத் தெரியாமல் நம்மைச் சுற்றி நியதி தவறாமல் தொடர்ந்து சுழல்கின்றன எனப் பிள்ளை பெருமாள் திரு அரங்கத்து மாலையில் குறிப்பிடுகிறார். இங்கு ஒரு சக்கர சுழற்சியைச் சார்ந்து இன்னொரு சக்கர சுழற்சியானது அமையப் பெற்றிருப்பது நீதியாக உள்ளது.இத்தகைய சுழற்சிகளைப் போன்று, மனித வாழ்வின் பருவ சுழற்சியும், இயற்கையில் மாறி வரும் காலநிலை பருவங்களும் சுழற்சியாகச் சுற்றுகின்றன. இங்கு எல்லாவற்றிற்கும் ஒரு காலமும் நேரமும் வரையறை செய்யப்பட்டு நிகழ்வாக வெளிப்படுவதை நாம் உணர்வதில்லை. காலம் நிற்காமல் சுற்றிக் கொண்டே உலகத்தை நடத்துவதாகக் கொண்டால் காலம் காட்டும் “குறியீடு” என்பதை எத்தனை பேர் அறிந்து வைத்துள்ளோம்.

காலத்திகிரியில் “உணர்வு” என்னும் மையத்தின் வழியாகவே உயிரற்ற உயிருள்ள பொருட்கள் தொடர்பு கொண்டு இயங்குகின்றன. பஞ்சபூதங்களான நிலம், நீர், நெருப்பு,காற்று, ஆகாயம் போன்றவை தாவரங்கள் மற்றும் அனைத்து உயிரினங்களுடனும் நெருங்கிய



தொடர்பு கொண்டு ஆற்றலை உணர்ந்து பிரபஞ்ச சக்தியுடன் இணைந்து வாழ்கின்றன.

நம் மனதில் ஏற்படும் ஒரு எண்ணமானது பெரு வெளியில் கலந்து அதன் உணர்வு. தாக்கமாக எல்லா இடங்களிலும் வெளிப்படுத்தும் என இது குறித்து ஆராயும் பல மனிதர்கள் சுவாரசியமாகக் குறிப்பிடுகின்றனர். மனித உடலில் ஐம்பூதங்களின் சமநிலையே உடலின் ஆரோக்கியம் மற்றும் உணர்வுகளைத் தீர்மானிக்கின்றன என்பதைப் படிக்கும் போது நமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். "பிரக்ஞை" என்று கூறப்படும் இந்த உணர்வானது எப்படி அவதானிக்கப்படுகிறது என்று அறிய ஆவலாக உள்ளதா?

நமது ஊர் பக்கத்தில் ஆற்றங் கரையிலேயோ, வயல் பகுதியிலேயோ தொட்டாற் சிணுங்கி செடியைப் பார்த்திருப்பீர்கள். அதன் இலையை ஒரு விளையாட்டாகத் தொட்டு சிறுவயதில் விளையாடி இருப்போம். தொட்டவுடன் அந்த இலைகளானது தன்னை மூடி சுருங்கிக் கொள்ளும். இது போலவே, வெப்ப ஒளிக்கு ஏற்றார் போல, சூரியன் நகரும் திசையிலேயே சூரியகாந்தி பூ நகர்ந்து மலரும். ஆம்பல், அந்திமந்தாரை போன்ற பூக்கள் அந்திப் பொழுதில் மலர்ந்து, விடியற்காலையில் சூரிய ஒளிபடும்போது இதழ்கள் குவியும் (மூடும்) தன்மை கொண்டவை. இது எதனால் என்று என்றைக்காவது நாம் யோசித்து இருக்கிறோமா? இது குறித்து நாம் சிறுவயதில் அறிவியல் வகுப்பில் படித்திருப்போம் ஆனால் அப்போது இதனுடைய உட் பொருளை உண்மையில் உணர்ந்து இருக்கமாட்டோம்.

இவை அனைத்துமே, தாவரம் சார்ந்த பிரிவில் ஆங்கிலத்தில் nastic movement என்று அழைக்கப்படும் திசையைச் சாராமல் இத்தகைய தாவரங்களானது தொடுதல், வெப்பம். ஒளிச் செறிவு போன்றவற்றால் கண்ணுக்குத் தெரியாமல் தூ ண்டுதலுக்கு ஆட் பட்டு தங்களின் இயங்கு தன்மையை வெளிப் படுத்துகின்றன. பதினெட்டாம் நூ ற்றாண்டில் தான் தாவரங்களுக்கு உயிர் மற்றும் உணர்ச்சிகள் உள்ளது என்பதை அறிவியல் அறிஞர்கள் கண்டு பிடித்தனர். ஆனால் அதற்கு முன்பே ஓரறிவு உயிர்களையும் உடன் பிறப்பாகக் கொண்டு வாழ்ந்த மனிதர்களின் உயிர் இரக்கப் பண்பான "அன்பு" எப்படிப் பட்டதாக இருந்திருக்கும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும் அல்லவா?. இங்கே எத்தனை நவீன தொழில் நுட்பம் வந்தாலும் உணர்வு எனும் மையத்தை மட்டும் எதனால் உருவாக்கி விடமுடியும்? யோசித்துக் கொண்டே காத்திருங்கள்.

காலத்திகிரியில் பின்னோக்கி சென்று சில விஷயங்களை நாம் பார்க்கலாம். அடுத்த பயணத்தில் மீண்டும் சந்திப்போம்.

(காலத் திகிரி சுழலும்)

***

# காலத் திகிரி பற்றிய வாசகர் கருத்து

காலத்திகிரி எனும் அழகான இத்தொடரின் ஆரம்பமே அசத்தலாக, கூழாங்கற்களை நதிநீரில் நகர்த்தி வைத்து, நம் மனக்கண் முன் காட்சியைத் திரையிடுகிறது.

இதன் ஒவ்வொரு சொற்கோவையும் அழகியலை அணிந்திருக்கிறதெனச் சொன்னால் அது மிகையில்லை.

இப்பிரபஞ்சத்தின் இயக்கத்தையும் அதன் ஒவ்வொரு நிகழ்வுகளையும் உயிர்ப்புடன், அறிவியல் ரீதியாகவும் ஒப்புவிக்க விழையும் இக்கட்டுரைத் தொடரானது மக்கள் மனங்களை வெகுவாக ஈர்க்கும். அதற்கு கீழ்காணும் சிறு துளியே சான்று பகரும்.

கனவுகளோடு வாழும் ஒரு இளம் துளிர் விருட்சமாய் மாற, அதன் கிளைப் பரப்பி பூமியில் நிற்க, அதனின் திடமான உறுதி என்பது ஒரு நாளில் கிடைத்த வரமாக அதற்கு இருக்காது என்பதைப் புரிந்து கொள்ளும் போது இந்த வாழ்வானது அழகாகிறது//

பேரழகு வாய்ந்த காலத்திகிரியை எழுதிய கரங்களும், கட்டுரையைச் சுமந்து வந்த முத்தமிழ் கலசமும் இன்னுமின்னும் வலிமை பெற்று ஓங்குக!

வாழ்த்துகளுடன்
**தமிழ்நெஞ்சம் அமின்** – பிரான்சு

---

**கா**லத் திகிரி... நான் முதல் முறையாக கேள்விப்படும் வார்த்தை இது. அதற்கேற்ப, இதுவரை அறியப்படாத, பேசப்படாத விஷயங்களை இத்தொடர் பேசப் போகிறது என்று புரிகிறது. நம் அகத்துக்குள் புதைந்து கிடக்கும் புதிர்கள், விடை பகரப்படாத கேள்விகள் ஏராளம். அவற்றுக்கு எல்லாம் இத்தொடர் விடை கூற முயலும் என நம்புகிறேன், சகோதரியைப் போல நானும் காத்திருக்கிறேன்.

தினத்தந்தி தேவதை இதழ் எடிட்டர் – **திரு. பழனியப்பன் அவர்கள்,**
சென்னை

---

மிக அட்டகாசமாகச் சுழல ஆரம்பித்திருக்கிறது காலத் திகிரி.

கோனார்க் சூரியனார் கோவிலின் காலச் சக்கரத்துடன் சிறப்பாகப் பயணத்தைத் துவக்கியுள்ளது. அழகான வகைப்படுத்தலுடன் கட்டுக்குள் நிற்காத காலத்தை எழுத்தில் நிலைக்க வைக்கப் போகிறீர்கள். ஆவலுடன் காத்திருக்கிறோம். காலப் பெருநதி பெருகி ஓடட்டும்

**கவிஞர், எழுத்தாளர் திருமதி. சரஸ்வதி** அவர்கள்.

- சிறுகதை

# மௌனத்தின் சாட்சியம்



திருமதி.றொசில்டா அன்டனி
இத்தாலி

பாரிஸின் அந்தச் குளிர்கால காலைப் பொழுது, வழக்கத்திற்கு மாறான ஒரு கனத்தோடு விடிந்தது. வானம் சாம்பல் நிறத்தில் போர்த்தப் பட்டிருந்தது.

நீதிமன்றத்தின் பிரம்மாண்டமான கதவுகள் திறக்கப்படும்போது, அங்கிருந்த காற்றில் ஒருவித அந்நியமான வாசனை கலந்திருந்தது. சட்டங்களின் மணம், பழைய மர இருக்கைகளின் மணம், மற்றும் அங்கே நீதி தேடி வரும் மனிதர்களின் அச்சத்தின் மணம்.

மலர் தனது தடித்த கோட்டுக்குள் ஒடுங்கிப் போயிருந்தாள். அவளது இடுப்பில், ஒரு வயது மகன் அகரன், வெளி உலகத்தின் எந்தச் சலனமுமின்றி, தாயின் கழுத்தை இறுகப்பற்றியபடி உறங்கிக் கொண்டிருந்தான்.

அவனது மூச்சுக்காற்று அவளது கழுத்தில்படும்போதெல்லாம், ஒரு சிறு இதம் அவளுக்குள் பரவியது. ஆனால், அது அவளது நடுக்கத்தை நிறுத்தவில்லை.

நீதிமன்றத்தின் உயர்ந்த கூரை, அவளது துயரத்தை இன்னும் சிறியதாகக் காட்டுவது போல் இருந்தது. பிரெஞ்சு வழக்கறிஞர்களின் உரத்த வாதங்கள் அவளுக்கு ஏதோ ஒரு புரியாத பாடலைப் போலக் கேட்டன.

"மேடம் மலர்... சாட்சிக் கூண்டிற்கு வரவும்," என்று மொழி பெயர்ப்பாளர் மென்மையான தமிழில் அழைத்தார்.

அவள் மெதுவாக நடந்து

சென்றாள். கூண்டில் ஏறும்போது, அவளது பார்வை வலதுபுறம் திரும்பியது.

அங்கே, கண்ணாடிக் கூண்டுக்குள் நின்றிருந்தான். இரண்டு வருடங்களுக்கு முன்பு, யாழ்ப்பாணத்தில் சுற்றமும் நட்பும் சூழ, தாலி கட்டிய அதே பிரதீப்.

அன்று அவன் கண்களில் இருந்த அந்தத் துடிப்பும், காதலும் எங்கே போயின? இன்று அவனது கண்கள் தரை பார்த்துக் கிடந்தன.

"திருமதி மலர், அன்று இரவு என்ன நடந்தது? எதனால் உங்கள் கணவர் மீது புகார் அளித்தீர்கள்? விளக்கமாகச் சொல்லுங்கள்," நீதிபதியின் கேள்வி மொழி பெயர்க்கப்பட்டது.

மலரின் தொண்டை வறண்டது. அவளுக்குப் பழைய நினைவுகள் அலை அலையாக வந்தன.

மூன்று வருடங்களுக்கு முன்பு பிரான்ஸ் வந்திறங்கியபோது, ஈபிள் கோபுரத்தின் வெளிச்சத்தில் ஒரு புதிய வாழ்க்கை அமையும் என்றுதான் அவள் கனவு கண்டாள். ஆனால், பாரிஸின் புறநகர்ப் பகுதியில் இருந்த அந்தச் சிறிய வாடகை வீடு, அவர்களுக்கு ஒரு சிறைச் சாலையாக மாறும் என்று அவள் நினைக்கவில்லை.

"மலர், இன்னைக்கு ஓவர் டைம் (Overtime) பார்த்தும் லோன் கட்ட காசு பத்தல," என்று பிரதீப் விரக்தியில் கத்துவான்.

"பரவாயில்லை பிரதீப் நாம் மெல்லச் சமாளிக்கலாம்," என்று அவள் தேற்றுவாள்.

ஆனால், மொழி தெரியாத நாட்டில், இரவு, பகல் என வேலைகளுக்குப் பின்னால் ஓடி ஓடி பிரதீப்பின் உடல் மட்டுமல்ல, மனமும் தளர்ந்து போனது.

இரவு பகலாக உழைத்து, கிடைக்கும் சொற்பப்பணத்தில் வாடகை, மின்சாரம், கார்க்கான கடன் என அனைத்தும் தீர்ந்த பின், கையில் மிஞ்சுவது வெறும் விரக்தி மட்டுமே.

அந்த விரக்திதான் மெல்ல மெல்ல அவனைக் குடிப் பழக்கத்திற்குத் தள்ளியது.

"ஏன் பிரதீப், இப்படி மாறிட்டீங்க? முன்னாடி எல்லாம் எவ்வளவு அன்பா இருப்பீங்க?" என்று கேட்டால், "அன்பா? இங்கே அன்பு இருந்தா சோறு போடுவாங்களா? இந்த நாட்டுல வாழணும்னா மாடா உழைக்கணும். எனக்கு அழுத்தம் தாங்க முடியல!" என்று கத்துவான்.

அன்பு அரித்துத் தின்னப்பட்ட

இடத்தில் வன்முறை குடியேறியது.

“மேடம் மலர்? உங்கள் பதிலை நீதிமன்றம் எதிர் பார்க்கிறது,” மொழி பெயர்ப்பாளர் மீண்டும் நினைவு படுத்தினார்.

மலர் நிமிர்ந்தாள். பிரதீப் அவளை ஏக்கமாகப் பார்த்தான். அந்தப் பார்வையில், “என்னை மன்னித்து விடு, என்னைக் காப்பாற்று” என்ற வேண்டுதல் இருப்பது போல அவளுக்குத் தோன்றியது. அவளது காதல் அவளைத் தடுத்தது. “சொல்லாதே மலர்.. அவன் உன் கணவன். இங்கிருந்து அவனை ஜெயிலுக்கு அனுப்பினால், அவன் வாழ்க்கை என்னாகும்?” என்று அவளது மனம் கதறியது.

அப்போது, உறக்கத்தில் இருந்த அகரன் லேசாக முனகினான். அவனது சின்னஞ்சிறு பிஞ்சு விரல்கள் மலரின் சேலைத் தலைப்பை இறுகப் பற்றின.

அந்தத் தொடுதல் அவளுக்குப் பல விஷயங்களை நினைவு படுத்தியது.

அன்று இரவு... பிரதீப் போதையில் வந்திருந்தான். பணத் தகராறு முற்றிய போது, அவன் அவளைக் கீழே தள்ளி மிதித்த அந்தத் தருணம். அருகில் தொட்டிலில் இருந்த அகரன் கத்திய போது, அவன் தூக்கியெறிந்த மதுப் புட்டி அகரனின் தலைக்குச் சில அங்குல தூரத்தில் சிதறிய அந்தப் பயங்கரம்.

“இன்று நான் மௌனமாக இருந்தால், நாளை என் மகன் இதே வன்முறையைப் பழகிக் கொள்வான். அல்லது அதே வன்முறைக்கு இரையாவான்,“ என்று அவள் இதயம் எச்சரித்தது.

மலர் பேசத் தொடங்கினாள்.

“அன்று... அவர் குடிபோதையில் இருந்தார். பணம் தொடர்பாகத் தகராறு வந்தது. நான் சமாதானம் செய்ய முயன்றேன். ஆனால், அவர் என்னைச் சுவரில் முட்டித்



தள்ளினார். என் கழுத்தை நெரிக்க முயன்றார். என் குழந்தை கத்தியபோது, அவன் மீதும் கை வைக்கத் துணிந்தார்..."

வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஈயக் குண்டுகளாய் விழுந்தன. பிரதீப்பின் தலை இன்னும் தாழ்ந்தது.

வழக்கறிஞர் குறுக்கிட்டார், "உங்களுக்கு அவர் மீது இன்னும் காதல் இருக்கிறதா?"

மலர் ஒரு நிமிடம் மௌனமானாள். கண்ணீர் கன்னங்களில் வழிய, "ஆம்... அவரை எனக்கு இப்போதும் பிடிக்கும். ஆனால், என் கணவரை விட, என் மகனின் பாதுகாப்பு எனக்கு முக்கியம். வன்முறையை ஒரு பாடமாக என் மகனுக்கு நான் கற்றுக்கொடுக்க விரும்பவில்லை," என்றாள் உறுதியாக.

சாட்சியம் முடிந்து வெளியே வந்தபோது, பாரிஸின் குளிர்ந்த காற்று அவளது முகத்தில் அறைந்தது. அவள் ஒரு பெரிய மலையைத் தாண்டிய உணர்வு பெற்றாள்.

அவளுக்குத் தெரியும், இந்தச் சமூகம் அவளைத் தூற்றும். "புருஷனைப் பிடிச்சு ஜெயில்ல போட்டவ" என்றும், "குடும்பத்தைக் கலைச்சவ" என்றும் அவதூறுகள் வரும். யாழ்ப்பாணத்தில் இருக்கும் உறவினர்கள் அவளைப் போனில் அழைத்துத் திட்டுவார்கள். ஆனால், எதைப் பற்றியும் கவலைப்படப் போவதில்லை.

அவள் தன் மகனின் முகத்தைப் பார்த்தாள். அவன் இப்போது விழித்திருந்தான். அவனது கண்கள் நிர்மலமாக இருந்தன.

'வாடா தம்பி... நாம் போகலாம்," என்று அவனை அணைத்துக் கொண்டாள்.

அவளது இதயத்தில் பிரதீப்பை தவிர வேறு யாருக்கும் இடமிருக்காது. அது அவளது காதல். ஆனால், அவளது வாழ்க்கை அவளது மகனுக்காக. பிரான்ஸ் நாட்டின் அந்தச் சட்டம் அவளுக்குப் பாதுகாப்பை வழங்கலாம், ஆனால் ஒரு தாயாக அவள் எடுத்த அந்த முடிவுதான் அவளுக்கு நிம்மதியை வழங்கியது.

பனிப் பொழிவுக்கு நடுவே, தன் மகனைத் தாங்கியபடி, ஒரு புதிய பாதையில் மலர் நடக்கத் தொடங்கினாள். அவள் ஒரு அகதி மட்டுமல்ல, தன் மகனின் எதிர்காலத்தைக் காக்கும் ஒரு போராளியாகவும் அந்த நீதிமன்றத்திலிருந்து வெளியேறினாள்.

***



வேலைக்கும் வீட்டுக்கும் நடுவே

# பெண்ணின் சமநிலைப் போராட்டம்

**ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்** – புல்மோட்டை

மனித வாழ்க்கையை பல்லாயிரம் வருடங்கள் முன்னோக்கிப் பார்த்தோமாயின் பெண் என்பவள் யார்? ஆண் என்பவன் யார்? இருவருக்குமான அந்தஸ்துக்கள் எவை? பெண் போற்றப்பட்டாளா? பயன்படுத்தப்பட்டாளா? என்ற பல நூறு கேள்விகளுக்கெல்லாம் பதில்கள் கிடைத்துவிடும் என்பது உறுதி. மனிதன் தோன்றியது முதல் இன்று வரையான காலப்பகுதியில் கட்டங்கட்டமாக பெண்களின் விடயத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்வதை அறிந்தும் உணர்ந்தும் வருவது உண்மை.

பண்டையகால மனித வாழ்க்கையை அலசும் போது பல ஆச்சரியங்கள் தெரியவரும்.

ஆண் நிலையற்ற தங்குமிடங்களை அமைத்து ஆண் பெண் இருவரும் நிரந்தரமில்லா ஒரு வாழ்வை வாழ்ந்து வந்தார்கள். அக்கால கட்டம் அறியாமை அதிகமாகக் குடி கொண்டிருந்த காலம். ஆணுடனான பெண்ணின் வாழ்வானது அடிமைத் தனத்தை கையிலெடுத்தது. அடக்கு முறைகளுக்கு செவிசாய்க்கும் கட்டுப் படும் சிறகுடைந்த வாழ்வாக காணப் பட்டது.

ஆண்கள் வேட்டையாடி உணவுகள் தேடி வர பெண்கள் குழந்தைகளைப் பராமரித்தல், துணிகள் துவைத்தல், உணவு சமைத்தல், ஆணிற்கு பணி விடைகளை செய்து கொடுத்தல், அவனின் உணர்வுகளை மதித்து அவனுக்கான அவளாக மாறி இல்லற வாழ்க்கையில் ஈடுபடுதல் இதுவே அக்காலப் பெண்கள்.

அரிஸ்டாட்டிலின் கருத்தின் படி, "பெண்ணானவள் அவளுக்கே உரிய சில குறைபாடுகள் உடைய பண்புகள் உடையவள். ஒரு பெண் குறைபட்ட ஆண் ஆவாள். பெண் குறைந்த பண்புகளைப் பெற்ற ஊனமுடையவள். அதை நாம் அன்றாட வாழ்க்கையில் காணலாம். பெண்ணின் திறமை அசாதாரணமானது தான். ஆனால் அது எவ்வித அதிகாரமும் இல்லாதது. இயற்கையாகவே ஆண் உயர்ந்தவன் பெண் தாழ்ந்தவள். முன்னவர் ஆளும் திறமை பெற்றவர். பின்னவர் ஆளுகைக்கு உட்பட்டவர்"

பெண்ணின் உணர்வுகள் ஆசைகள் திறமைகள் மிதிக்கப்பட்டு வாழ்ந்த காலங்களவை. காலம் செல்லச் செல்ல சிறுசிறு மாற்றங்கள் ஏற்பட்டு இன்று

வானளவும் உயர்ந்து நிற்கின்றாள் பெண்ணவள்.

இன்று ஆண் பெண் சமத்துவங்கள் பேசப்படுகின்றன. பெண் அடிமைத் தனங்களுக்கு எதிராக பல குரல்கள் ஒலிக்கின்றன. பெண்ணியத்தில் பல்வேறு புரட்சிகள் தளிர்விடத் தொடங்கி விட்டன. ஆணுக்குப் பெண் தாழ்ந்தவளில்லை. ஆணும் பெண்ணும் சமமாக இணைந்தே சமுதாயம் என்பது ஆதி காலம் தொட்டு கடைபிடிக்கப் பட்டு வந்துள்ளன. இவ்வாறு கடைப் பிடிக்கப்பட்ட போதிலும் இன்று வரை சில இல்லங்களில் அடிமைத்தனமும் அடக்குமுறைகளும் நெறி தவறாத வண்ணம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. சிலர் பெண்களை சுதந்திரமாகப் பறக்க விடுகின்றனர். இன்னும் சிலர் பெண்களைக் கூண்டுக் கிளிகளாக வளர்த்து வருகின்றனர். பசிக்கும் போது மட்டும் உணவளித்து இது பெண்ணுக்கு கட்டாயம் தேவை என அறியப்படும் போது அவற்றைப் பல கட்டுப் பாடுகளோடு கொடுத்துவிட்டு மீண்டும் பறித்துக் கொள்கின்றனர். பெண்களுக்கு சுதந்திரத்தை கொடு என்ற குரல்களுக்கு மத்தியில் பெண்களின் சுதந்திரத்தைப் பறித்துவிடு என்ற குரல்களும் ஒலிக்கத் தான் செய்கின்றன.

வாழ்க்கை எனும் பெரும் வண்டியை ஆண் பெண் இருவரும் சேர்ந்தே ஓட்டிட முடியும். ஆண் பெண் ஆகியோர் நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவர்கள். ஒன்றின்றி வேறொன்றில்லை என்பதை அனைவரும் புரிந்து செயற்படும் போதே வாழ்க்கை வண்டி நேரான பாதையை நோக்கிச் செல்லும்.

“அத்தியின் மலரும் வெள்ளை யாக்கை கொள் காக்கை தானும்
பித்தர் தம் மனமும் நீரில் பிறந்த

மீன்பாதம் தானும் அத்தன் மால் பிரம்ம தேவனால் அளவிடப் பட்டாலும் சித்திர விழியார் நெஞ்சம்
தெரிந்தவர் இல்லை கண்டீர்”

இவ்வாறு இடைப்பட்ட காலத்தில் எழுந்த இலக்கியங்கள் ஆணாதிக்கத்தை வலுவூட்டும் வகையில் தோன்றியுள்ளன.

எனவே தான் மகாகவி சுப்ரமணிய பாரதியார் அனைத்திற்கும் முற்றுப் புள்ளி வைக்கும் நோக்காக குரல் கொடுத்தார். இவர் பெண்களின் விடுதலைக்காகவும் சமத்துவத்திற்காகவும் பேசினார்.

“ஏட்டையும் பெண் தொடுவது தீமையென்றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போ மென்ற விந்தை மனிதர் தலைக விழ்ந்தார்.

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில் மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார் அதை வெட்டி விட்டோ மென்று கும்மியடி!”

என பழமைவாதிகளின் முகத்தில் அறைந்தாற்போல் பெண்களுக்காக எழுச்சிக் குரல் எழுப்பினார்.

பெண்ணைப் பற்றி பேசுவதாயின் முதலில் தென்படுவது அவளின் பொறுப்புக்களே. அன்றும் தான் இன்றும் தான் பெண்ணுக்கென்றே உரித்தாக்கப்பட்டதாக பல பொறுப்புகள் பார்க்கப்படுகின்றன.

குடும்பத்தைப் பராமரித்தல், குழந்தைகளைப் பாதுகாத்தல், வீட்டு வேலைகளில் கவனம் செலுத்துதல், நேரத்துக்கு உணவு சமைத்தல், துணிகள் துவைத்தல், கணவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளை சரிவர செய்து முடித்தல் அதுபோக தற்காலப் பெண்களைப் பொறுத்த வரைக்கும் அவர்கள் செய்யும் தொழிலில் கவனம் செலுத்துதல், தொழில் விடயங்களில் முன்னேறிச் செல்வதற்கான வழிவகைகளை செய்து கொள்ளுதல், நேரகாலத்தோடு எழுந்து தனக்குரிய வேலைகளையும் தயார்படுத்தல்களையும் செய்து கொள்ளல், கணவனின் குடும்ப சம்பிரதாய விடயங்களுக்கு தன்னையும் பழக்கப்படுத்துதல், கணவனின் பெற்றோர்களைப் பராமரித்தல், அவர்களின் நலனில் கவனம் செலுத்துதல், அவர்களுக்கு நிறைவேற்ற வேண்டிய பணி விடைகளை செய்து முடித்தல், தனது பெற்றோர்களைப் பராமரித்தல், அவர்களுக்காக நேரம் ஒதுக்குதல், பிரச்சினைகள் குழப்பங்கள் வருமிடத்து அவற்றுக்கு எதிராக குரல் கொடுத்தல், நீதியின் பக்கம் தலை சாய்த்தல் போன்ற ஏகப்பட்ட விடயங்களை சமாளித்து தன் வாழ்வை நகர்த்திச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் பெண் காணப்படுகின்றாள்.

இதற்கிடையில் கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் சென்றால் பிள்ளைகளை யார் பராமரிப்பது? வீட்டுக்கு வருவோரை யார் கவனிப்பது? என்ற சிக்கல்களும் ஏற்படுகின்றன. சில இல்லங்களில் பெண்கள் வெளியில் செல்லவே கூடாது. தேவைக்காகவும் அந்நிய ஆடவருடன் பேசக்கூடாது. அருகில் உள்ள கடைகளுக்குக் கூட செல்ல விடாது பல தடைகளை விதித்து பெண்களை அடைத்து வைக்கும் ஆண்களும் இருக்கத்தான் செய்கின்றனர். அவ்வாறு கணவன் இல்லாத பட்சத்தில் கணவனின் குடும்பத்தார் தடை விதிக்கின்றனர் குறையாகப் பேசுகின்றனர். சொற்களை வீசி மனதை காயப்படுத்துகின்றனர்.

கணவன் மனைவிக்கும் மனைவி கணவனுக்கும் அவரவர் சுதந்திரம் விடயங்களில் ஒத்தாசையாக செயல்படும் குடும்பங்களும் இருக்கின்றன. கணவன் மனைவிக்கு இடையில் அவரவர் பொறுப்புக்களில் அவரவர் தான் அவரவர் வேலைகளை செய்ய வேண்டும் என்ற பாகுபாடுகளின்றி ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக இருந்து செயல்படும் குடும்பங்களும் இக்காலத்தில் காணப் படுகின்றன.

பெண்ணின் இயல்பைப் புரிந்து அவளின் வலிமையை உணர்ந்து அவளின் இயலுமைக்குத் தடை விதிக்காத வகையில் துணை நிற்கும் ஆண்களே சமூகத்தில் போற்றப்பட வேண்டியவர்கள்.

அக்காலத்திலும் தான் இக்காலத்திலும் தான் மண்ணைப் பிளந்து ஊடுருவிச் சென்று பெரும் விருட்சமாக நிழல் பரப்பிக் கொண்டிருக்கும் பல பெண்கள் உயிரோடு இருந்தும் பேசப்படுகின்றார்கள் மரணித்தும் உயிர் வாழ்கின்றார்கள்.

நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில்

வணிகத்தில் முன்னணியில் இருந்த அன்னை கதிஜா (ரலி) அவர்கள், ஹதீஸ் அறிவிப்பில் முதன்மையானவராக இருந்த அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள்,

கல்விக்காக குரல் கொடுத்த மலாலா யூசுஃப், எந்தப் புயலுக்கும் சாயாத எதற்கும் பின்வாங்காத ஈழத்துப் பெண் கிழக்கு மாகாணத்தில் சாய்ந்த மருதூரில் பிறந்த கலங்கரை விளக்கு திருமதி ஜெசிமா இஸ்மாயில், பொதுத்தேர்தலில் வெற்றி பெற்ற இலங்கையின் முதலாவது தமிழ் பெண் திருமதி ராஜ மனோகரி புலேந்திரன், மக்கள் சேவகி திருமதி பத்தினியம்மா திலக நாயகம் போல் போன்ற எத்தனையோ பெண் ஆளுமைகள் அத்தனை சவால்களையும் முறியடித்து சோதனைகளைத் தாண்டி பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர்.

பல தடைகளையும் பிரச்சினை களையும் கட்டுப் பாடுகளையும் தரை மட்டமாக்கி தனது சுதந்திரத்தை நிலை நாட்டுமுகமாக இலங்கையிலும் தான் ஏனைய நாடுகளிலும் தான் பெண்கள் தமது திறமைகளை வெளிக்கொண்டு வந்துள்ளனர். குடும்பத்தோடு மட்டும் தம் வாழ்வை சுருக்கிக் கொள்ளாமல் தங்களது சிந்தனைகள் ஆளுமைகள் மூலம் தமக்கான ஒரு அடையாளத்தை அங்கீகாரத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற வெறியோடு களம் இறங்கும் பெண்கள் ஒருபோதும் சளைத்தவர்கள் அல்ல சாதிக்க முன் வந்தவர்கள். அவர்களில் குடும்பப் பொறுப்போடு சேர்த்து தமது வேலைகளிலும் ஒரு சமநிலைப் போக்கோடு நடந்து கொள்கிறார்கள். அவர்களின் அந்த தூரநோக்குச் சிந்தனைகள் அவர்களை ஒருபோதும் பின்வாங்க விடாது.

ஒரு பெண் கற்றால் ஒரு சமூகமே கற்றதற்கு சமம். கல்வியில் பெண்களின் பங்கு அவசியமானது. அடுத்தடுத்த சந்ததிகளை நேரிய பாதையில் வழி நடத்துவதாயின் பெண், கல்வி கற்பது அவசியம். சமூகத்தில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமாயின் அங்கே பெண் அடக்கு முறைகள் உடைத் தெறியப்பட வேண்டும். பெண்ணின் தேவைகள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

தற்காலத்தில் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக தொடர்ந்து விழிப்புணர்வுகள் வந்து கொண்டே இருக்கின்றன. பெண் ஒரு சுமை தாங்கியாக அல்லாமல் அவளையும் ஒரு சுதந்திரப் பறவையாக பார்க்கும் கண்கள் உருவாக வேண்டும். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் துன்புறுத்தல்கள் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும். பெண்ணை வெறும் காமப் பொருளாகப் பார்க்காமல் அவளையும் ஒரு சக மனிதராய்ப் பார்க்கும் மனோநிலைகள் உருவாக வேண்டும்.

பெண்களின் கனவுகள் வெறும் காகிதங்களோடு மட்டும் முடிந்து விடாமல் சிறகு முளைத்து வானுயரப் பறந்திட தூண்டுதல் அளிக்கப்பட வேண்டும். இவைகளில் மாற்றங்கள் ஏற்பட்டாலே பெண் ஒரு சுதந்திரப் பறவை தான். பெண் என்பவள் வேலைக்கும் வீட்டுக்கும் நடுவே அனைத்தையும் இணைக்கும் பாலமாக நிற்கின்றாள்.

***



பகுதி 1

# தைராய்டு சுரப்பி பிரச்சினைகளும் நிவாரணமும்

Dr **ஜலீலா முஸம்மில்** MBBS SL
சிரேஷ்ட வைத்திய அதிகாரி
ஆதார வைத்தியசாலை, ஏறாவூர்


### தைராய்டு சுரப்பி நோய்கள்

இன்றைக்கு அதிகரித்துவரும் உடல்நலக்குறைபாடுகளில் அனைத்து வயதினரையும் பாதிக்கும் பிரச்சினையாக உள்ளது. குறிப்பாக, பெண்களை அதிகம் அச்சுறுத்தக்கூடிய நோய்களில் முக்கியமானதாக தைராய்டு உருவெடுத்துள்ளது.

தைராய்டு சுரப்பி குறைவாக அல்லது அதிகமாக சுரப்பதுதான் இதயம், எலும்பு, வளர்சிதை மாற்றம், நோய் எதிர்ப்பு என இவை அனைத்து தொடர்பு வியாதிகளுக்கும் மூலகாரணமாக அமைகிறது. இந்த பாதிப்பு இருப்பவர்களுக்கு பல்வேறு உடல் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படும். விவரிக்க முடியாத எடை அதிகரிப்பு, தசை பலவீனம், மாதவிலக்கு மாற்றங்கள், சோர்வு, சரும வறட்சி போன்றவை ஏற்படலாம்.

தைராய்டு சுரப்பி பல உடல் செயல் முறைகளில் ஈடுபடும் ஹார்மோன்களை உருவாக்கி உற்பத்தி செய்கிறது.தைராய்டு நோய் பல்வேறு வடிவங்களில் வருகிறது.

தைராய்டு சுரப்பி கழுத்தின் முன்புறத்தில், மூச்சுக்குழாயைச் சுற்றி அமைந்துள்ளது. இது தொண்டையின் பக்கவாட்டில் நீண்டு, பட்டாம் பூச்சியின் வடிவத்தை ஒத்த இரண்டு அகன்ற மடல்களைக் கொண்டுள்ளது. உடலில் பல்வேறு உடல் செயல்பாடுகளைப் பராமரிப்பதற்கு ஹோமோன்களை சுரக்கும் பல்வேறுபட்ட சுரப்பிகள் உள்ளன. அதில் ஒரு வகை தான் இந்த தைராய்டு சுரப்பி. இது உடலின் மாற்றுச் சுழற்சி (metabolism) வேகத்தை கட்டுப்படுத்தும் மிக முக்கியமான சுரப்பி.




தைராய்டு சரியாக செயல் படவில்லை என்றால் முழு உடலும் பாதிக்கப்படலாம். உதாரணமாக, ஹைப்பர் தைராய்டிசம் என்பது உடல் அதிக அளவு தைராய்டு ஹார்மோனை உற்பத்தி செய்தால் ஏற்படும் ஒரு நோயாகும். ஹைப்போ தைராய்டிசம் என்பது உடல் குறைவான தைராய்டு ஹார்மோனை உற்பத்தி செய்வதாகும்.

தைராய்டு சுரப்பு பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம் உடற்பயிற்சி இல்லாமை, அதிக மன அழுத்தம், ஜங்புட் எனும் துரித உணவுப் பொருட்கள். தினமும் அதிக நேரம் உழைப்பவர்களுக்கு ஹைபர் தைராய்டிசம் (தைராய்டு ஹோர்மோனின் அதிக சுரப்பு) வரும் வாய்ப்பு அதிகம் என்கிறார்கள். இதன் அறி குறிகள் களைப்பு, மன அழுத்தம், அதிக குளிர் உணர்வு, உடல் எடை கூடுதல் போன்றவை.

தைராய்டு பிரச்சினைக்கு மூல காரணம் அயோடின் சத்து குறைபாடு. சைவ உணவு சாப்பிடுபவர்களில் 63 சதவீதம் பெண்களுக்கும், 36 சதவீதம் ஆண்களுக்கும் அயோடின் குறைபாடு இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

தைராய்டு சுரப்பி இரண்டு வகையான ஹோர்மோன்களை உற்பத்தி செய்கிறது.

T4 (Thyroxine)

T3 (Triiodothyronine)

இந்த ஹார்மோன்கள் உடலின்

சக்தி உற்பத்தி, உடல் வெப்பநிலை, இதயத் துடிப்பு, உடல் எடை, மூளை வளர்ச்சி (குழந்தைகளில் முக்கியம்) போன்றவற்றை கட்டுப்படுத்துகின்றன.

மூளையில் உள்ள Hypothalamus கீழ் தலமஸ் Pituitary gland கபச்சுரப்பி

இவை TSH (Thyroid Stimulating Hormone) மூலம் தைராய்டு சுரப்பியை கட்டுப்படுத்துகின்றன.

## தைராய்டு சுரப்பி பிரச்சினைகள்

1. Hypothyroidism (தைராய்டு குறைவு)

**அறிகுறிகள்:**

- சோர்வு
- உடல் எடை அதிகரிப்பு
- குளிர் தாங்காமை
- முடி உதிர்வு
- மலச்சிக்கல்
- மனச்சோர்வு
- நினைவக இழப்பு
- வழக்கமான, கனமான மாதவிடாய் சுழற்சிகளைத் தாங்குதல்
- கரடுமுரடான, உலர்ந்த கூந்தலைக் கொண்டிருப்பது
- குரலற்றதாகவோ அல்லது கரகரப்பாகவோ இருத்தல்
- குளிர் வெப்பநிலைக்கு உணர்திறன்

இருப்பது

**தைராய்டின் ஆரம்ப எச்சரிக்கை அறிகுறிகள்**

- களைப்பு
- எடை அதிகரித்தல்
- எடை இழப்பு
- இதயத் துடிப்பு குறைந்தது
- உயர்த்தப்பட்ட இதயத் துடிப்பு
- வெப்ப உணர்திறன்
- குளிர்ச்சிக்கு எதிர்வினை
- காரணங்கள்

அனைத்து வகையான ஹைப்பர் தைராய்டிசமும் தைராய்டு ஹார்மோன்களின் அதிகப்படியான உற்பத்தியிலிருந்து உருவாகிறது என்றாலும், இந்த நிலை வெவ்வேறு அடிப்படை காரணங்களால் ஏற்படலாம்.

2. Hyperthyroidism **(தைராய்டு அதிகம்) அறிகுறிகள்:**

- இதயத் துடிப்பு அதிகரிப்பு
- உடல் எடை குறைவு
- அதிக வியர்வை
- கைகள் நடுக்கம்
- பதட்டம் மற்றும் எரிச்சலை உணருதல்
- தூக்கம் இன்மை
- தைராய்டு சுரப்பியில் தைராய்டு வீக்கம் அல்லது கழுத்து வலி ஏற்படுதல்.
- தசை நடுக்கம் மற்றும் பலவீனம்
- ஒழுங்கற்ற மாதவிடாய் அல்லது மாதவிடாய் முழுமையாக இல்லாமை
- கண் அசௌகரியம் அல்லது பார்வை தொடர்பான பிரச்சினைகள்

3. **தைராய்டு கட்டி** (Goiter)

- கழுத்தில் வீக்கம்
- விழுங்குவதில் சிரமம்

தைராய்டு ஹார்மோன்களின் அதிகப்படியான உற்பத்தியால் கிரேவ்ஸ் நோய் ஏற்படுகிறது.

**நச்சு அடினோமாக்கள்**

சில கழுத்து வலிப்பு நோய்களில் இந்த முடிச்சுகள் பல இருக்கலாம். இந்த முடிச்சுகள் தைராய்டு சுரப்பிக்குள் உருவாகி அதிகப்படியான ஹார்மோன்களை வெளியிட்டு, உடலின் வேதியியல் சமநிலையை சீர்குலைக்கின்றன.

**சப்அக்யூட் தைராய்டிடிஸ்:**

தைராய்டு அழற்சி அதிகப்படியான ஹார்மோன்கள் இரத்த ஓட்டத்தில் கசிந்து, தற்காலிக ஹைப்பர் தைராய்டிசத்திற்கு வழிவகுக்கும், இது வாரங்கள் அல்லது மாதங்கள் கூட நீடிக்கும்.

**பிட்யூட்டரி** – கபச்சுரப்பியின் செயலிழப்பு அல்லது வீரியம் மிக்க தைராய்டு சுரப்பி வளர்ச்சிகள்

அசாதாரணமானது என்றாலும், இந்த காரணிகள் ஹைப்பர் தைராய்டிசத்திற்கும் வழிவகுக்கும்.

தைராய்டு நோயை நிரந்தரமாக குணப்படுத்த விரும்பினால், அடிப் படைக் காரணத்தைக் கண்டறிவது முக்கியம்.

**குடல் கசிவு** (Leaky gut)

- அதிகப்படியான வயிற்று வீக்கம்
- போதிய ஊட்டச்சத்து இல்லாமை / ஏழை உணவு
- வலிநிவாரணிகள், ஆன்டாசிட்கள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள் (antibiotics) நீண்டகாலம் பயன்படுத்துதல்
- பாதரசம், அலுமினியம் போன்ற கனிம நச்சுகள்
- பூச்சிக்கொல்லி ஃ பிளாஸ்டிக் பாவனை

இவை நேரடியாக தைராய்டு நோயை உண்டாக்கும் என்று உறுதியான மருத்துவ ஆதாரம் இல்லை.

ஆனால் சில காரணிகள் அடிப்படையாக தைராய்டு செயல்பாட்டை பாதிக்கக்கூடும்.

**தைராய்டு நோய் வருவதற்கான முக்கிய காரணங்கள்**

- Autoimmune நோய்கள் (Hashimoto's> Graves)
- அயோடைன் குறைபாடு அல்லது அதிகபாடு
- குடும்ப வரலாறு
- கர்ப்பத்திற்குப் பின் ஹார்மோன் மாற்றம்
- சில குறிப்பிட்ட மருந்துகள்

**பரிசோதனைகள்**

TSH (முக்கிய சோதனை)
Free T4
Free T3
Ultrasound

**சிகிச்சை**



Hypothyroidism → Levothyroxine

அதாவது தைராய்டு சுரப்பு குறைவு நோய்க்கு லெவோ தைரோக்சின் எனப்படும் மருந்து உபயோகிக்கப் படுகிறது.

Hyperthyroidism → Anti-thyroid

தைராய்டு கூடுதல் சுரப்புக்கு தைராய்டு எதிர்ப்பு மருந்துகள் பாவிக்கப் படுகின்றன.

கட்டிகள் ஏற்படின் தேவைப் பட்டால் அறுவை சிகிச்சை.

அயோடின் முக்கியம்

அயோடைன் தைராய்டு ஹார்மோன் உற்பத்திக்கு அவசியம்.

அயோடைன் குறைபாடு இருந்தால் தைராய்டு வீக்கம் ஏற்படலாம்.

தைராய்டு சுரப்பி சிறியது என்றாலும், உடலின் சக்தி, எடை, மனநிலை, இதயம், வளர்ச்சி அனைத்தையும் பாதிக்கும் மிக முக்கியமான சுரப்பியாகும்.

(மிகுதி அடுத்த இதழில்)

நன்றி!

# சென்ரியு கவிதைகள்

தமிழ்மாமணி
**கவி நிலா மோகன்**
தஞ்சாவூர் ,
தமிழ்நாடு மாநிலம்
இந்தியா.

மீன்பிடிப் படகு
நடுக்கடலுக்குள்
அமைதியாக
செல்லும்
மீனவன் அஸ்தியைக்
கரைக்க
*******

சுமக்கும்
ஓட்டைக்குடம்
பிணத்தைச்
சுற்றிப் போடும்
கண்ணீர்
கோலம்
*******

ஆடிப் பட்டத்தில்
விதை தேடும்
நிலங்கள்
கஞ்சித் தொட்டியில்
உழவன்
*******

தீயில்
மண்பாண்டங்கள்
ஒவ்வொரு நாளும்
தீக்குளிக்கும்
குயவனின்
வயிறு
*******

ஓடாதத் தறிகள்
பசிக்கும்
நெசவாளி
வயிற்றில் கிடக்கும்
கிழிந்த
ஈரத்துணி
*******

சலவைக் கல்
அடித்துத்
துவைத்தும்
அகலாமல்
வெளுப்பவனின்
அழுக்கு
*******

வெளியூரில்
குழந்தைகள்
வீட்டில்
தூங்காமல்
தவிக்கும்
விளையாட்டு
பொம்மைகள்
*******

அம்மாவின்
புடவை
உத்திரத்தில்
அசையாமல்
தொங்கும்
அப்பாவின்
உடல்
*******

கடிக்கும்
செருப்புகள்
ஒவ்வொரு நாளும்
வலியுடன்
நடக்கும்
தைப்பவன்
வாழ்க்கை
*******

தென்னங்கள்
பானைகளில்
சொட்டுச் சொட்டாய்
வடிகிறது
தோப்புக்காரனின்
வறுமை
*******



# செவிசாய்த்தல்

இயந்திரமாய் ஓடிக் கொண்டிருக்கிறோம் கொஞ்ச நேரம் உட்கார்ந்து கேட்டிடதான் இங்கு யாருமில்லை என்றாகி போயிற்று.

நான் சொல்வதை கொஞ்சம் கேளுங்களேன் என்று கெஞ்சினால் கூட "சொல்லு" என்று எரிச்சலுடன் கடிந்து விழும் வார்தையுடன் சொல்லவந்த சொல்லும் ஓடி ஒளிந்துவிடுகிறது.

அதிகமான உறவுகளில் விரிசல் விழுவதற்கான காரணம் அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்பதை கேட்காமல் தானாக ஒன்றை கற்பனை செய்து கொள்வதே. என, பெரும்பாலானவர்கள் கூற கேட்டிருக்கிறேன். அவர்(ள்) எங்க கேட்கப்போகிறார்(ள்),

சொல்லி என்ன பிரயோசனம், என்று ஆசைகளையும், தேவைகளையும், ஏக்கங்களையும் செவிசாய்க்க ஆளின்றி பூட்டி வைத்திருப்பவர்கள் சிலர், யாரிடமாவது ஆதங்கங்களை சொல்லவேண்டுமென நினைத்து ஹராமான வழிகளை தேடியவர்கள் பலர்.

என்றாவது சிந்தித்திருக்கிறீர்களா?

இறைவன் எமக்கு ஏன் இரு காதுகளை பரிசளித்துள்ளான் என்று. நிறைய செவிமெடுக்க வேண்டும் என்றே!

அதிலும் ஆச்சரியம் ஒரே இடத்தில் இரு காதுகளையும் ஒன்றாக படைக்காது வலது புறம் இடதுபுறம் என வெவ் வேறு திசைகளில் படைத்திருப்பது ஏன்? இருபக்கமிருந்து வருபவற்றை நன்றாக செவி மடுக்க வேண்டுமென்றே!

நேரமொதுக்கி செவிசாய்த்தாலே போதும் பாதிப் பிரச்சினை தீர்ந்து விடும். உட்கார்ந்து அதற்கான தீர்வுகளை வழங்கிகொண்டிருக்க வேண்டும் என்றில்லை "நான் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன்

சொல்லுங்க" என்ற ஒற்றை வார்த்தையில் குவிந்து கிடக்கிறது பிரச்சினைக்கான முழுத் தீர்வும்.

அகண்டு விரிந்த இந்த பூமியில் இத்தனை ஆன்மாக்கள் இருந்தும் ஒருவர் உங்களை நாடிவந்து தன் இன்ப துன்பங்களை பகிர்கிறார் என்றால் நீங்கள் பாக்கியசாலிதான்.

இத்தனை உயிர்களிருந்தும் அவர்களின் கஷ்ட நஷ்டங்களை செவிசாய்க்க இறைவன் உங்களை தேர்ந்தெடுத்திருப்பது என்பது

பேரருளாகத்தானே இருக்க முடியும். எது எப்படியோ இறைவனைத் தவிர செவ்வனே செவியேற்பவன் யாருமில்லை.

வருடக்கணக்கில் உன் இதய வரிகளை வடித்து கொட்டினாலும் அவனைப்போல் செவ்வனே செவி யேற்பவனை நீ எங்கும் கண்டு கொள்ள மாட்டாய்.

அனைத்தையும் செவியேற்கும் பேராற்றல் ரஹ்மானைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது. யாரும் கேட்கவில்லையே என உங்களை நீங்களே மாய்த்துக் கொள்ளாது

நெற்றியைப் பூமியில் பொருத்தி, அவனிடம் சொல்லுவதில் சுகம் காணுங்கள்! உலகத்தின் எந்த மூலையிலும் கிடைக்காத பேரின்பத்தை பெற்றிடுவீர்கள்.

செவிகள் அருளாயின் செவி யேற்பவன் பேரருளே!

**அம்னா ஸைனப் ரிஸாத்**

புத்தளம்

# உறவின் ப(பி)ரிவு

-------(குறுங்கதை)------



ஃபெமிலி குரூப்பில் வந்திருந்த மரணச் செய்தியையே இமை தட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

ஆறுமாதங்களுக்கு முன்னர் விடு முறையில் நாட்டுக்குச் சென்ற போது.. நான் சமீனா மாமியைப் பார்க்கப் போனது நினைவில் வந்தது.

வாப்பாவின் ஒரே தங்கை சமீனா மாமியோடு எனக்குக் கொஞ்சம் ஒட்டுதல் கூடுதலாகவே இருந்தது. மாமியை சந்தித்துப் பேசி விடைபெற்று வரும் போது "மகன் நீங்க கொஞ்சம் அக்பர் சாச்சாவ பார்த்துட்டுப் போங்க"

"என்ன மாமி அவருக்கு சுகமில்லயா"

"இல்ல மகன். மாஷாஅல்லாஹ் அவர் நல்லாதான் இருக்கிறார். நீங்க அடுத்த கிழமை கட்டார்க்கு போறீங்க என்று சொன்னீங்களே, வயசாளி தானே கொஞ்சம் பார்த்துட்டுப் போங்க"

"ஆ.. சரி மாமி நான் போறேன்"

"மகன் சந்தோஷத்துக்கு என்ன சரி குடுத்தாலும் நல்லம்"

"ஆஹ் ஒகே மாமி"

அவசரமாக வீட்டுக்கு போக வேண்டிய தேவை இருந்தாலும் நல்ல காலம் அந்நேரம் மாமியின் பேச்சைத் தட்டிக்கழிக்காமல் அக்பர் சாச்சாவைப் பார்க்கப் போனேன். என்னைக் கண்டு எவ்வளவு சந்தோஷப்பட்டார். கட்டித் தழுவிக் கொண்டார். "என்னைத் தேடிப் பார்க்க வந்தது மிச்சம் சந்தோஷம் புள்ள. மறுமுறை வரும்போது வைப் புள்ளகளையும் கூட்டிக் கொண்டு வாங்க" என்று நன்றாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

அக்பர் சாச்சா வாப்பாவுக்குத்தான் சாச்சா முறை. நாங்களும் அப்படியே அழைத்துப் பழகிவிட்டோம். சின்ன வயதில் அவருடைய கடைக்கு வாப்பா எங்களை அழைத்துப் போவார். விதவிதமான இனிப்புப் பொருட்கள் எல்லாம் தருவார்.

நல்ல இரக்கமான மனிதர் வாப்பாவுக்கும் தொழிலில் பல முறை உதவிகள் செய்திருப்பதாக வாப்பா சொல்லியிருக்கிறார்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எப்படியாவது குடும்ப உறவுகளை சந்தித்துக் கொள்ள வேண்டும். என்ற பெருமூச்சோடு மீண்டும் போனை பார்க்கிறேன்,மரண அறிவித்தலில் அக்பர் சாச்சா சிரித்துக் கொண்டிருந்தார்.

**மக்கொனையூராள்**

***

# கரிசல் நிலத்தின் நினைவுகள்

--------------------சிறுகதை

**இத்தாலியிலிருந்து**
**திருமதி. மது வர்மன்**



யாழ்ப்பாணத்தின் காலையிருள் இன்னும் முழுமையாக நீங்கவில்லை.



அதிகாலை நான்கு முப்பது மணி.

சிவத்தின் நிழல், வீட்டின் வாசலில் நீண்டிருந்தது. வெயில் வருவதற்குள் கிளினிக் சென்றுவிட்டுத் திரும்பிவிட வேண்டும் என்ற எண்ணம் அவரை ஒவ்வொரு மாதமும் அதி காலையிலேயே கிளம்பத் தூண்டியது.

பஸ்ஸில் ஏறி, முதல் ஆளாக கிளினிக் வாசலில் காத்திருப்பது அவருக்கு வழக்கம். ஆனால், வழக்கம் போல் வைத்தியர் வருவதற்குத் தாமதமானது.

சுற்றிலும் இருந்தவர்கள் தங்கள் கதைகளைப் பேசிக்கொண்டிருந்தனர். ஆனால் சிவம் அமைதியாக தன் கைவசம் இருந்த கிளினிக் கொப்பியைப் புரட்டிக்கொண்டிருந்தார். முதல் நம்பர் டோக்கன் அவருடையது. பக்கத்தில் இரண்டாவது நம்பர் டோக்கனுடன் அமர்ந்திருந்த கலா, அவரை கவனித்தாள்.

“என்னைய்யா சுகமா இருக்கிறியளா? போன மாசம் கிளினிக் கிலயும் முதல் நம்பர் நீங்கதான். இந்த மாதமும் அதே நம்பர்ல இருக்கிறீங்க?” கலா மென்மையாகக் கேட்டாள்.

அவள் பேசியதைக் காதில் வாங்காதது போல், சிவம் தனது கொப்பியைத் திறந்து மூடினார்.

“என்னய்யா, ரொம்ப யோசனையில் இருக்கிறீங்க? போன மாசம் பார்த்த போதும் இதே மாதிரி தான் இருந்தீங்க. எதையோ பறிகொடுத்த மாதிரி... உடம்பு சரியில்லையா?” கலா மீண்டும் கேட்டாள், அவர் முகத்தில் தெரிந்த கவலையைப் பார்த்து.

பெருமூச்சுவிட்ட சிவம், "என்னத்தைச் சொல்லுறது... மூணு நாள் உடம்பு சுகமா இருக்கும், அடுத்த மூணு நாள் படுக்கையில படுத்துக் கிடப்பேன். இப்பிடித்தான் என்ட வாழ்க்கை போகுது" என்றார் விரக்தியுடன்.

"ஐயா, உங்களுக்கு என்ன வியாதி எண்டு நான் தெரிஞ்சு கொள்ளலாமா?" கலா பரிவுடன் கேட்டாள்.

"என்ர கஷ்டத்தைச் சொன்னா, "இவ்வளவு கஷ்டத்தையும் எப்பிடித் தாங்கிக்கிறீங்க? எப்பிடி இவ்வளவு காலமும் உயிரோட இருக்கிறீங்க?" எண்டுதான் பிள்ளை கேப்பீங்க." சிவத்தின் குரலில் ஒருவித சோர்வு ஒலித்தது.

"ஏன் ஐயா இப்பிடிச் சொல்றீங்க?" என்றாள் கலா.

அந்தக் கேள்வி, சிவத்தின் கடந்த காலக் கதவுகளைத் திறந்தது. அவர் பேசத் தொடங்கினார்.

"நாங்க நான்கு ஆண்பிள்ளைகள், இரண்டு பெண்பிள்ளைகள். மற்ற ஆண்பிள்ளைகள் மூன்று பேரும் பொறுப்பில்லாம ஊர் சுத்திகிட்டுத் திரிஞ்சானுங்க. சின்ன வயசுல இருந்தே குடும்பப் பொறுப்ப நான் தான் தூக்கிச் சுமந்தன். ஊரில இருந்து கொழும்பு போற லொறியில கூலி வேலைக்கு போனேன். மூட்டைகளைத் தூக்குற வேலைக்கு நான் மட்டும் தான் கெதியா இருப்பன். வெங்காய மூட்டைகளை முதுகில சுமந்து, ஓடி ஆடி வேலை செய்றதப் பார்த்து ஊரில இருக்கிற இளம் வயது பெடியள் ஆச்சரியப்படுவாங்க. என்ர சகோதரங்கள்ட பிள்ளைகளையும் நான் தான் என்ர பிள்ளைகளா நினைச்சு வளர்த்தன். அஞ்சு வருஷமா எனக்கும் என்ர மனைவிக்கும் பிள்ளையில்ல. எல்லா கோயிலுக்கும் போயிட்டு வந்தன். பிறகு, ஐந்து வருஷம் கழிச்சு எனக்கு மூண்டு பொம்பிளைப் பிள்ளைகளும் ஒரு ஆண்பிள்ளையும் பிறந்தாங்க."

சிவத்தின் கண்கள் சற்று நேரம் பிரகாசமடைந்தன.

"நாட்டுல ஒரே பிரச்சினை. லொறியில மூட்டை தூக்கப் போனாலும், என்ர பிள்ளைகளுக்குத் தேவையான அரிசி, பருப்பு, பால்மா, சீனி எல்லாத்தையும் வாங்கிட்டுத்தான் வீட்டுக்கு வருவன். என்ர கஷ்டம் ஒரு நாளும் என்ட பிள்ளைகளுக்கு வந்துடக்கூடாது எண்டு நினைப்பன். என்ர உறவுகளுக்கும் என்னால முடிஞ்ச உதவியைச் செய்வன்."

பேசிக்கொண்டிருக்கும் போதே, சிவத்தின் முகம் மீண்டும் இருண்டது.

"ஆனா இப்போ... எனக்குப் புற்றுநோய் எண்டு மூணு முறை சத்திரசிகிச்சை செஞ்சு வெட்டி கொத்தி போட்டாங்க. அதோட இதய அடைப்பும் இருக்கு எண்டு சொல்லி ஒன்பது அடைப்பு எடுத்தாங்க." அவர் குரல் கரகரத்தது.

கலாவின் கண்கள் கலங்கின. "ஐயா, இவ்வளவு கஷ்டத்தையும் இப்பிடிச் சிரிச்சிட்டே சொல்றீங்க. உங்கட மனைவி எங்க? அவங்க என்ன செய்யுறாங்க?"

"அவளா... அவதான் என்ட வாழ்க்கையில கிடைச்ச மிகப்பெரிய சொத்து. எனக்கு புற்று நோய் வந்து

பத்து வருடங்கள் ஆகிவிட்டது. என்ர உடம்பு சரியில்லாதப்போ என்ன செய்யணும், என்ன சாப்பிடணும் எண்டு எல்லாத்தையும் பார்த்துப் பார்த்துச் செய்வா. அவ இல்லேன்னா இவ்வளவு காலமும் நான் உயிரோட இருந்திருப்பனா எண்டு தெரியல." சிவம் அவசரமாக தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டார்.

"என்ர உறவுகள் ஒருவரும் எங்களுக்கு உதவிடவில்லை. பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பனும், வீட்டு வேலை,தோட்ட வேலை, எனது வேலை என்று ஓய்வில்லாத ஓட்டம். பாவம் அவள் தான் என் ராசாத்தி. என்ர உடல் நிலை பாதிப்பால அவளை சில நேரங்களில் திட்டியும் இருக்கிறன். அதை நினைத்து எனக்குள்ள வருந்தியும் இருக்கிறேன்.

அவளுக்கு நான் கடமைப் பட்டிருக்கன். ஆனால் என் வருத்தத்தால் அவளுக்கு எதுவும் செய்ய முடியவில்லை. தெரிந்து இருந்தால் அவளுக்கும், பிள்ளைகளுக்கும் என்று கொஞ்சம் சேமித்து வைத்திருப்பன். இப்போ அதுகள நினைச்சா கவலை"

"ஐயா நீங்கள் கவலைப்பட வேண்டாம் உங்கள் மனைவியை கண் கலங்காமல் பார்த்து இருக்கிறீங்க, பிள்ளைகளை படிக்க வைச்சு இருக்றீங்க. நல்ல பிள்ளைகள் இதை விட வேற என்ன வேண்டும்" என்றாள் கலா.

"உண்மை தானம்மா மூத்தவள் டீச்சர், இரண்டாவது மகள் இத்தாலியில் கட்டிக் கொடுத்தன், கடைகுட்டியும் கட்டிட்டாள். மகன் மட்டும் கட்டல. அவன் தான் நான் நோய் வாய்ப்பட்டதில இருந்து குடும்ப சுமையை சுமக்கிறான். நான் இப்பவும் என்ர ஆம்பிள பிள்ளையால கௌரவமாக தான் இருக்கிறன். அவனுக்கும் நல்ல வரன் அமையனும். அதற்குள்

நான் இறக்க முன் பிள்ளைகளின் பிள்ளைகளை கண்டு விட வேண்டும் என்கின்ற ஆதங்கமே எனக்கு" என்றார் சிவம்.

"ஐயா நீங்கள் விரைவில் உங்கள் பேரப்பிள்ளைகளை கையிலேந்துவீர்கள். யோசிக்காதீங்க" என்று ஆறுதல் கூறினாள் கலா. அந்த நேரத்தில், கிளினிக் கதவு திறந்தது. வைத்தியர் வந்தார். முதல் டோக்கனை எடுத்துக்கொண்டு சிவம் எழுந்தார். கலாவைப் பார்த்து, "சரி பிள்ளை, உன் வார்த்தை பலிக்கட்டும். நான் உள்ள போயிட்டு வாறன்" என்றார்.

சிவம் உள்ளே நுழைந்த போது, அவர் உடலில் இருந்த நோயை விட, அவரது மனவலிமை அதிகமானது போல் தோன்றியது.

அந்த நொடி, கலாவுக்கு ஒன்று புரிந்தது. ஒரு மனிதன், தான் சுமக்கும் வலியைப் பிறருக்குச் சொல்லும்போது, அது அவனது பலவீனமாக இருக்காது, அது அவனது மன உறுதியின் அடையாளமாக இருக்கும். சிவம் கரிசல் நிலத்தில் வேர் விட்டுப் படர்ந்த ஒரு ஆலமரம். அந்த மரம், ஆயிரம் காலம் தாங்கும் வலியைத் தனக்குள் அடக்கிக்கொண்டு, பலருக்கும் நிழல் தரும் என்பதை அவள் உணர்ந்தாள்.

(முற்றும்)

***

# யார் அவளோ...

அன்றைய இராப்பொழுது என்
உள்ளத்தைத் திருடியது
அழகி அவளின் தோற்றம் கண்டு
மயங்கியே நின்றேன்
அவள் ஆகாயத் தோட்டத்தின்
தேவதையாய் இருக்கக் கூடும்

முழு வட்ட வடிவில் அடிவானில்
உலா வந்தாள்
எட்டிப் பிடிக்கக் கைகள்
எத்தனித்தும் ஏனோ அவள்
அகப்படவில்லை
ஆனாலும் என் மனச்சிறையில்
அவள் அகப்பட்டு விட்டாள்

யார் அவளோ தெரியவில்லை
எனினும் எனைப் பார்த்துப்
புன்னகைத்தாள்
பதிலுக்கு நானும்
புன்னகைத்தேன்..
அவளோ விண்மீன் கூட்டத்தின்
நடுவே சிம்மாசனத்தில்
வீற்றிருந்தாள்

அவளின் ஒளிபட்டு பூமியெங்கும்
அழகுமயம்
அழகு என்ற மூன்றெழுத்தின்
உதாரணமாய் அவள் தெரிந்தாள்
அவளோ தன் பேரழகால்
இரவையே விழுங்கிவிட்டாள்

இதமாய் வீசிய தென்றல்
மேனியை வருட
வண்டுகளும் அவள் அழகில்
மயங்கி ரீங்காரமிசைக்க
நாணல் புற்களும் மௌன
நடனமாடின
அவள் யாராய் இருக்கக் கூடும்?

மழைக்குத் தேங்கிய
நீர்க்குட்டையிலும்
அவள் விம்பம் தெளிவாய்த்
தெரிந்தது
தெளிந்த நீரிலும் மிதந்தது அவளின்
சிரிப்பு

கைகளால் பிடித்து அள்ளி
அணைக்க ஆசை கொண்டேன்
எனினும் அவள் அழகைக்
கலைக்க மனம் இடம் தரவில்லை

பூக்களைக் கொய்து மாலையாய்ச்
சூட நினைத்தேன்
ஆயினும் அவள் எழிலுக்கு முன்
பூக்கள் வர மறுத்துவிட்டன
அவள் அழகால் தரணியிலுள்ள
அனைத்துமே மிளிர்ந்தன

இத்தனைச் சாகசங்கள் புரிந்தும்
அவள் ஒரு கர்வமும்
கொள்ளவில்லை
யார் நீ என நான் எழுப்பிய
கேள்விக்கும் விடையை
தரவில்லை அவள் புன்னகையைத்
தவிர

**அமீன் அன்சீர்,**
மதவாச்சி.



# நெஞ்சோரமாய்...

இரண்டு வாரத்திற்கு பின் பகல் சாப்பாட்டிற்கு தாய் வீட்டிற்கு வந்த ரஸானாவிற்கு மனசெல்லாம் பூரிப்பாய் இருந்தது. உம்மா, வாப்பா, தங்கச்சி, தம்பியை கண்ட சந்தோஷம் மாத்திரமல்ல ஓடி திரிந்து விளையாடிய பின் முற்றம்.. ரசித்து வளர்த்த பூஞ்செடிகள்.. பார்த்து பார்த்து அலங்காரம் செய்த தனது வீடு..

உம்மாவின் கைப்பக்குவம் வீடு முழுக்க மணத்தது..

திடீரென ஏதோ நினைவு வர கண்ணோரம் கசிந்தது.. மீண்டும் இச் சந்தர்ப்பம் எப்பொழுது வாய்க்குமோ..

குடும்பத்தோடு சஹனில் அமர்ந்து அவளுக்கு பிடித்த ப்ரின்ஜோல், மோஜு, சிக்கன் டெவல், அன்னாசி பச்சடி என வகை வகையாய் செய்திருந்ததை ரசித்து சந்தோஷமாக உண்டனர். டெஸர்ட்டிற்கு செய்திருந்த ஜக்ரி புடிங்கோடு பின்பக்கம் வந்தவள் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள். பின்பக்க மரக்கிளையில் குருவிகள் அமர்ந்து கீச்சிட்டு கொண்டிருந்தன.

இதே இடத்தில் கதிரையில் அமர்ந்து இவற்றை ரசித்தபடி எத்தனை கதைகளை, கவிதைகளை எழுதி இருப்பாள்..

அவள் கற்பனை வானில் தன்னிலை மறந்து இயற்கையில் லயித்து தன்னை ஒரு எழுத்தாளராக்கிய உலகம் இந்த சூழல் என்பதை நினைத்துப் பார்த்தாள்.

இனி இந்த சூழல் இல்லாமல் தன்னால் எழுத முடியுமா என்று மனதில் கவலை எழுந்தது..

“ரஸான்..” என்ற கணவரின் குரல் கேட்டு திடுக்குற்று உள்ளே சென்று அவசர அவசரமாக புடிங்கை சாப்பிட்டு முடித்தாள்.

“ரஸான்.. குயிக்கா உங்கட திங்ஸ் எல்லாத்தையும் செக் பண்ணி எடுத்துருங்க.. அதோட உங்கட முக்கியமான டாக்குயூ மெண்ட்ஸ், சர்டி பிகேட் எல்லாம் எடுக்க மறந்திட வேணாம்”

என அன்புக் கட்டளையிட்டான் கணவன் ரஷாட்.

"ஹ்ம்.. ஓகே" என சுரத்தில்லாமல் கூறினாலும் தங்கை ஹிமாவை துணைக் கழைத்து தேவையான பொருட்களை ட்ரவல்லிங் லெக்கேஜில் வைக்கும் போது அவளின்

தாய் ஸியானா

"ரஸானா...வாப்பா தொதலும் மாசி சம்பலும் வாங்கிட்டு வந்தார். இதையும் கொண்டு போங்க" என கையில் திணித்துச் சென்றாள்.. தந்தையின் பாசத்தில் மனசு இன்னும் உருகிப்போனது..

தன் வாப்பாவோடு இருக்கும் அவளின் பாசப்பிணைப்பு அலாதியானது..

தங்கை, "தாத்தி... எல்லாம் சரி தானே.. நா கிச்சன க்ளீன் பண்ணிட்டு வாரேன்.."

என சிட்டாக பறந்தாள்..

மாடியில் தனது அறையிலிருந்து வெளியே நோட்டமிட்டாள். அதே தெருவில் தனது வாப்பம்மா, மாமி வீட்டுப் பிள்ளைகளுடன் முன் முற்றத்தில் விளையாடிய நினைவுகள் அலை மோதியது.. நோன்பு காலத்தில் முன்னாள் தெருவில் எட்டுக் கட்டங்களாக பிரித்து சால் விளையாடும் சத்தம், அடுத்த வீட்டு நண்பி ஷிம்லாவோடு டாம், பல்லாங் குழி, லூடோ என கதைத்து சிரித்து விளையாடிய நினைவுகள் நெஞ்சில் அலைமோதியது..

மீண்டும் "ரஸானா...."

என்ற அழைப்பு கேட்டு சிந்தனையில் இருந்து விடுபட்டு கீழே ஓடினாள்..

அங்கு ஷிம்லா உட்பட சில உறவினர்கள் அவளுக்காக காத்திருந்தார்கள்.. சலாம் கூறி முஸாபா செய்து கொண்டு அவளின் நடந்து முடிந்த அண்மைய திருமணம், ஆஸ்திரேலியா பயணம் தொடர்பான விடயங்களை கதைத்துக் கொண்டிருக்கும் பொழுதே நேரம் ஆறு மணியை நெருங்கியிருந்தது.. அதான் ஒலித்ததும் மஹ்ரிபு தொழுகையை தொழுது விட்டு எயாபோர்ட் செல்வதற்கு ஆயத்தமானாள்..

குடும்பத்தினர் வேன் அருகே வந்து கண்ணீரோடு விடை கொடுத்தனர்.. கணவர் முன் சீட்டில் அமர பின்னால் பெற்றோர், உடன் பிறப்புகளுடன் அவள் ஜன்னல் ஓரத்தில் கண்ணீர் மல்க அமர்ந்து தனது வீட்டை,பாதையை பார்த்தாள்.

மெல்லமாக வேன் நகரத் தொடங்கியது.

மீண்டும் எப்பொழுது இந்த வாசனையை சுவாசிப்பேன் என்ற எண்ணம் வர கண்கள் குளமாக நெஞ்சோரமாய். சுருக்கென வலித்தது..

**ஷாமென் நிஸாம்டீன்**
கட்டுகஸ்தோட்டை

***

# வாசுகி வாசு



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டுள்ள வாசுகி வாசு, தனியார் கல்வி ஆசிரியையாக, எழுத்தாளராக, சமூகசேவகியாக, தையற்கலை ஆசிரியையாக கனடா தமிழாழி தொலைக்காட்சி இலங்கைக் கிளைத் துணைச் செயலாளராக வேலை செய்கிறார்.

அத்துடன், உளவியல் துறையை ISO Campus ளீழிதுஞ்றீற்வி மட்டக்கிளப்பிலும், ஆங்கிலத்தை SLEGA Campus கம்பஹாவிலும் கற்று தேர்ச்சி பெற்று, இரண்டிலும் Diploma முடித்து அண்மையில் பட்டமளிப்புகளையும் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பிரதான பதவியையும் வகித்துக் கொண்டு Lions Club அங்கத்தவராகவும் செயற்பட்டு வருகிறார். இவையாவும் இறைவன் கொடுத்த கொடையென அவனுக்கே நன்றி சொல்லும் அவரை முத்தமிழ் கலசம் சார்பாக நாமும் வாழ்த்துகிறோம்.

*மேலும், இந்திய கவித்தளங்களில் இணை நிறுவனராக, துணைத் தலைவராக, நிர்வாகியாக, நெறியாளராக, நடுவராகச், சிறப்பு அதிதியாகச் செயற்பட்டு வெற்றிச்*



மலையகக் கலாச்சார மன்றம் கௌரவித்தபோது

சான்றிதழ்கள், எண்ணற்ற விருதுகள் பாராட்டுகளைப் பெற்று வருகிறார்.

இலங்கை, இந்தியா, ஜேர்மன், கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் வானொலி தொலைக்காட்சிகளில்



வன்னிமாவட்ட பாடசாலையின் சமூகசேவை

கவிதைகளையும் வெளியிட்டு கவியரங்கமும் நடத்தி வருவதுடன், சென்ற வருடம் இவரது கன்னிப் படைப்பான சிறுவர் பாடல் மலர் எனும் நூலை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிட்டு உலகளாவிய ரீதியில் பிரபல்மானார்.

இரண்டாவது படைப்பாக சிறுவர் சிந்தனைப் பாடல்கள் எனும் நூலினை நூல் நிலையங்கள் ஊடாக அறிமுகம் செய்திருக்கிறார். இந்நூல், மிகவும் உயர்ந்த நிலை நூலாக அங்கீகரிக்கப் பட்டு வெகுமதியான பணப்பரிசிலை பெற்றுக் கொடுத்திருக்கிறது.

இரண்டாவது படைப்பாக சிறுவர் சிந்தனைப் பாடல்கள் எனும் நூலினை நூல் நிலையங்கள் ஊடாக அறிமுகம் செய்திருக்கும் இந்நூல், மிகவும் உயர்ந்த நிலை நூலாக அங்கீகரிக்கப்பட்டு வெகுமதியான பணப்பரிசிலை பெற்றுக் கொடுத்திருக்கிறது.



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இணைத் தலைவர் பதவி ஏற்ற போது

அடுத்த நூலாக மௌன மொழி எனும் கவிதைத் தொகுப்பை வெளியிடத் தயாராகி வருகிறார்.

இவரது அதீத ஆசை தமிழை வளர்த்துத் தரணியில் விதைப்பதேயாகும். சங்கவி பிலிம்ஸ், தினகரன், தினகரன் வாரமஞ்சரி வழங்கிய கலாரத்ன விபூஷன விருது, “வாழும் போது வாழ்த்துவோம்” “கௌரவிப்பு”, ”கனடா தமிழாழி தொலைக்காட்சியின் தந்தையரைப் பற்றிய கவியரங்கில் உலகசாதனை விருது, இவரது கன்னிப் படைப்பான சிறுவர் பாடல் மலர் எனும் நூலுக்குக் கிடைத்த அரச சாகித்திய விருது சென்னையில் நடந்த பத்தாயிரம் கவிதைத் தொகுப்பு எனும் நூலில் உலக சாதனை நோபல் பரிசு விருது போன்ற விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளார்.

“கனடா விழித்தெழு”, “பெண்ணே” என்னும் நிகழ்வில் அதிசிறப்பு




பிரமாண்டமான கௌரவிப்பு கொழும்பு Town Hall தினகரன் பத்திரிகை சங்கவி பிலிம்ஸ்

சமூகசேவை விருதையும் பெற்றுள்ளது மட்டுமன்றி, இலங்கை அரச விருதான சாகித்திய விருதை கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து (2023/ 2024/2025) பெற்றதை மகிழ்வுடன் தெரிவித்தார்.

மேலும் உலகளாவிய ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் "கனடா தமிழாழிப் பேரவையின்" இணைச் செயலாளராக இயங்கி வருகிறார்.

அத்துடன் உளவியல் துறை, ஆங்கிலம் ஆகிய பாடங்களில் தேர்ச்சி பெற்று இரண்டிலும் Diploma முடித்து அண்மையில் பட்டமளிப்புகளையும் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை



கனடா விழித்தெழு பெண் வழங்கிய சமூகசேவை விருது - விழத்தெழு பெண்ணே







மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பிரதான பதவியையும் வகித்துக் கொண்டு Lions Club அங்கத்தவராகவும் செயற்பட்டு வருகிறார். இவையாவும் இறைவன் கொடுத்த கொடையெனஅவனுக்கே நன்றி

சொல்லும் அவரை முத்தமிழ் கலசம் சார்பாக நாமும் வாழ்த்துகிறோம்.

ஆளுமை அறிமுகம் உதவி

**கமர்ஜான் பீபீ**

***











SRI LANKA
RIGHTS FOUNDATION


# கவிதைகள் சொல்கிறேன்

கவிதைகள் சொல்கிறேன் நீயும்
காத்திரு எனக்காய் அன்பே
சுமைகளை இறக்கி வைக்கச்
சுகமாகும் மனத்தின் தாளம்
நிமிடமும் நகர வில்லை
நின்னையும் மறக்க வில்லை
இமைகளும் உறங்கி டாதே
இதயத்தின் ஓசை கேட்கும்

காற்றது மேனி தொட்டுக்
கவிதைகள் கூறிச் செல்லும்
நேற்றது நிலையைச் சொல்லி
நிசத்தினில் காட்டிச் செல்லும்
தோற்றது மனமா என்றே
தொல்லைகள் செய்தே வேகும்
பாற்கடல் போல பொங்கிப்
பலவற்றை நினைவு கூரும்

கனவுகள் கண்ட உள்ளம்
கனிவுடன் கவிதை சொல்லும்
நனைத்திடும் கன்னம் தொட்டு
நாளெலாம் அழுது வைக்கும்
சினத்துடன் இருந்த போதும்
சிந்தையும் புரிந்து கொள்ளும்
நினைத்திட மாட்டேன் என்ற
நினைவுகள் அலையாய்த் துள்ளும்

பூவது வாசம் கண்டால்
புன்னகை புரிந்து கொள்ளும்
நோவது வந்தே கொல்லும்
நொடியினில் பார்த்து விட்டால்
போவது நாணம் தானே
புதியது வேறு என்ன?
சாவது பயமும் தானே
சகலமும் புரிந்தே போகும்

தமிழ்நெஞ்சம் அமின்



9 786249 425606